# சிவசரவணபவம்



அமரர்

சிவத்திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி)

(இதழாசிரியர் - கலைச்செல்வி 1958 - 1966)

அவர்களின்

## ஆத்ம நிவேதனம்

18-11-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குஞ்சிதபாதபட்டரின் பரம்பரையில் வந்துதித்த

சிவத்திரு

# சி.சிவசரவணபவன் [சிற்பி]

(இதழாசிரியர் – கலைச்செல்வி – 1958–1966)

அவர்களின்

# ஆத்ம நிவேதனம்

18.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த
அன்புத் தெய்வத்திற்கு இந்நூல்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "



பூவுலகில்
28.02.1933

பேருலகில்
09.11.2015

பாரத்வாஜி

# சிவத்திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி)

## திதி வெண்பா

மன்மத ஆண்டுஐப் பசித்திர யோதசியில்
நன்சிவ சரவணப வன்என்னும் - புண்ணியனே
வாழும் இலக்கியங்கள் வைத்தெமக்குத் தான் இறைவன்
தாளடைந்தான் நாம் தவிக்கச் சென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கிவ் வண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்தத்தேன்

## ஈசனுவக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ,
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ, பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டாளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமில்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

# திரு அருட்பா

## இராமலிங்கம் அடிகள் அருளிச் செய்த விண்ணப்பம்

எல்லாருடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆச்சிரமம் முதலிய உலகாசார சங்கற்பக விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும், எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெரும் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்!

**இராமலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் வாழ்வு

### சிவஸ்ரீ சு. சிவசுப்பிரமணியக்குருக்கள் அவர்களின்

# வாழ்க்கைச்சுருக்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மானிப்பாய் தேர்தல் தொகுதியிலுள்ள கந்தரோடை, பண்டைய ஈழத்தமிழர்களின் முதலாவது தலைநகரம் என்ற வரலாற்றுப் பெருமைக்குரியது. இவ்வூரிலுள்ள அந்தணர்கள் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் சமய அனுஷ்டானங்களிலும் மேம்பட்டோர் என "ஈழ மண்டல சதகம்" கூறுகின்றது. இவ்வூரிலே வாழ்ந்த சுவாமிநாதக்குருக்கள் - இலட்சுமி அம்மாள் தம்பதிக்கு மகனாக 14-06-1906 இல் பிறந்தார் **சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள்.**

இவருடைய தந்தையாரான சுவாமிநாதக் குருக்கள், காஞ்சிபுரத்திலிருந்து சிவப்பணிக்கென யாழ்ப்பாண மன்னர்களால் அழைத்து வரப்பட்ட குஞ்சிதபாதபட்டர் அவர்களின் வழித்தோன்றலாவர். தாயார் இலட்சுமி அம்மாள் திருவுத்தரகோச மங்கையிலிருந்து குளக்கோட்டு மகாராசாவாற் காரைநகருக்கு அழைத்து வரப்பட்ட மங்களேசுவரக்குருக்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடமும் அவரின் மாணவரான கந்தையா உபாத்தியாரிடமும் தமிழையும், தென்னிந்தியாவிலிருந்து வந்த சிதம்பர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதத்தையும் கற்றார். காரைநகர் - ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புத்திரி சௌந்தராம்பாளைத் தனது 17 ஆவது வயதிலே திருமணம் செய்தார். 18 ஆவது வயதில் தமிழ், சமஸ்கிருத பால பண்டிதர் பரீட்சையிற் சித்தியடைந்தார். 1925 ஆம் ஆண்டிலே கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து 1927 ஆம் ஆண்டிற் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். அதே ஆண்டில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணி புரிந்தார். அவ்வாண்டு மார்கழி மாதம் கந்தரோடைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியரானார். 1953 ஆம் ஆண்டில் இப்பாடசாலையின் தலைமை யாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். 1966 ஆம் ஆண்டில் தலைமையாசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பாடசாலையை நிறுவிய கந்தையா உபாத்தி யாயர் அவர்களின் நினைவாக அதன் பெயரைத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை என மாற்றியமை "தமிழ்க் கந்தம்" என்ற சஞ்சிகையை வெளியிட்டமை ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை எடுக்கும் மாணவர் களுக்கு உதவியாக விசேட வகுப்புக்கள் நடத்தியமை சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தியமை, விளை யாட்டு மைதானத்தை உருவாக்கி முதன்முதலாக இல்லங்களுக்கிடையே மெய்வல்லுநர் போட்டி நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமை - இவருடைய பாடசாலைப் பணிகளுட் குறிக்கத் தக்கவை.

ஆசிரியராக இருந்த போதே பொதுப் பணிகள் பலவற்றிலும் ஈடுபட்டார். கந்தரோடையிலுள்ள பெரியோர்களுடன் சேர்ந்து ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய சங்கக் கடை ஆகியவற்றை நிறுவினார். வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கம், கூட்டுறவுச் சமாஜம், பிராமண சமாஜம் அகில இலங்கைச் சிவப் பிராமண சங்கம், பிராம்மண சமூக சேவா சங்கம் முதலிய வற்றில் முக்கிய பதவிகள் வகித்து அவற்றின் முன்னேற் றத்திற்காக அயராதுழைத்தார். சுவ தரும போதம், ஞானதீபம், ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார். அண்டு தோறும் சித்திரை, வைகாசி மாதங்களில் கந்தரோடை வற்றாக்கை அம்பாள் ஆலயத்தின் நித்திய பூஜையையும் செவ்வனே செய்து வந்தார்.

பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் ஆசார்யாபிஷேகம் செய்விக்கப்பெற்று ஆலய மஹோற் சவங்கள், கும்பாபிஷேகங்கள் போன்றவற்றை வேதாகம நியதி தவறாது செய்து ஆத்ம திருப்தி அடைந்ததுடன் பலரின் பாராட்டுக்களையும் பெற்றார். உபநயனம், விவாஹம், ஆசார்யாபிஷேகம் முதலிய சுப கருமங் களுக்கு இவரையே பிரதம குருவாகக் கொள்வதில் திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டோர் பலர். நோய் வாய்ப்பட்டு உடல் தளர்ந்திருந்த காலத்திலும், அந்தணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களுக்குச் சமஸ்கிருதக் கல்வியை ஊட்டுவதிலும் சமயக்கிரியைகளைப் பயிற்றுவதிலும் பிரதிபலனை எதிர்பாராது ஈடுபட்டார். சமயம், சாஸ்திரம், சம்பந்த மாக இவருடன் உரையாடித் தெளிவு பெறுவதற்கென்றே பலர் இவரிடம் வருவதுண்டு.

தனது சமயப் பணியை மூத்தமகன் கனக சபாபதிக் குருக்களும் (கொழும்பு ஸ்ரீ பொன்னம்பல வாணேசர் கோவில்) கல்விப் பணியை இளைய மகன் சிவசரவணபவனும் (இராமநாதன் மகா வித்தியாலயம், உசன்) தொடர்ந்து திறம்பட ஆற்றுவதையும் அவர்களுக்கு முறையே புவனேஸ்வரி, சரஸ்வதி ஆகி யோர் உறுதுணையாக இருப்பதையும் காணும் திருப்தியு டனும் பெண்பிள்ளைகளான சாந்தநாயகி, இலட்சுமி, மீனாட்சி, நாகேஸ்வரி, பராசக்தி, சரஸ்வதி ஆகியோரை முறையே சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள் (பிரதம குரு - கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவில்) ஸ்ரீ சோமஸ்கந்தசர்மா (A.O. யாழ் அரசாங்கச் செயலகம்) ஸ்ரீ சேதுமாதவசர்மா (முன்னைநாள் காசாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜம்) ஸ்ரீ சோமாஸ் கந்த ஐயர் (அதிபர், ஏழாலை தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) ஸ்ரீ பரமேஸ்வரன் (O.A காணி அபிவிருத்தித் திணைக்களம் கொழும்பு) சிவஸ்ரீ வி. சுப்பிரமணியக்குருக்கள் (பிரதமகுரு கொழும்பு கொச்சிக் கடை காளியம்பாள் தேவஸ்தானம்) ஆகியோருக்குத் திருமணம் செய்து வைத்து அவர்கள் வளமுடன் வாழ்வதைக் காணும் மகிழ்ச்சியுடனும் பேரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் பூட்டப்பிள்ளைகளும் குதூகலத்துடன் வாழ்வதைக் காணும் நிறைவுடனும் வழமையாகச் செய்யும் ஆத்மார்த்த பூஜையை 11-1-84 புதன்கிழமையும் செய்து முடித்து விட்டு, சிவலிங்கப்பெருமானுக்கு அர்ச்சித்த மலர்களைக் கையிலெடுத்தபடியே சிவபெருமானின் திருவடி நீழலை அடைந்தார்.

ஓம் சாந்தி

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தனது சந்ததியின் வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில், தனது கதையை ஏட்டில் எழுதத் தொடங்குகிறார் ஒருவர். அவர் பின் வந்தோர் தொடர்ந்தும், தொடரறுந்தும் அவர் ஆரம்பித்த பணியை மேற்கொண்டனர். அந்த வம்சத்தினது கதை அவர்களது தனிப்பட்ட வாழ்வின் சம்பவங்களின் தொகுப்பாக மட்டுமன்றி, அவை சம்பவிக்கப்படுவதற்குக் காரணமான சமூக, அரசியற் சூழமைவையும் கோடி காட்டிச் செல்கின்றது.

ஏடுகளில் எழுதப்பட்டு வந்த இவ்வரலாறு, சிவத்திரு. ச. கணபதீஸ்வரக்குருக்களின் நினைவாக 13-03-1967இல் வெளியிடப்பட்ட 'ஆன்ம தர்சநம்' எனும் நினைவு மலரில் முதன் முதலில் அச்சுருப் பெற்றது.

ஒரு தேசிய இனத்தின் வரலாற்றைத் திரிபுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் சூழ்நிலையில், இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ள தனி மனித வம்ச வரலாறுகள், எமது இனத்தின் வரலாறு பற்றிய கருத்துருவாக்கத்தைக் கட்டமைப்பதற்கான அத்தியாவசியமான மூலக்கூறுகளை எமக்கு வழங்கும். இப்பின்னணியில் அடுத்து வரும் பக்கங்களில் அவ் வம்ச வரலாறு மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வழி வம்ச வரலாறு

திரு. உத்தரகோமங்கையென்னுந் திருத்தலத்திலிருந்து மங்களேஸ்வர சுவாமிக்கு இப்போ பூசை செய்கின்றவர்கள் முப்பத்திரண்டு குருக்கமார்கள். இந்த முப்பத்திரண்டு குருக்கமாருக்கும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னால் குருக்கமார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப்படுகின்றது. செப்புப்பட்டயத்தில் எழுதப்படுகின்ற விஷயம் என்னவானால்: -

**மங்களேசுவரர் துணை.**

கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்திருநூற்றைம்பத்தொன்று. பிரபவாதி வருஷம் முப்பத்திரெண்டாவது விளம்பி வருஷம் இருபத்தைந்தாந்திகதியும் திங்கட்கிழமையும் சோதி நட்சத்திரமும் பூருவபக்கத் திரயோதசியும் மிதுனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதப்படு கின்ற சாதனம்: -

திரு உத்திரகோசமங்கையென்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற மங்களேசுவரசுவாமி கோயிலுக்கு இப்போ முதற்பூசைப்பங்காளராக இருக்கிற காஞ்சீபுரம் கல்யாண சுந்தரக் குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்கள், முதல் ஸ்தானிகராகவும் மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப் பங்கு முறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தானிகர்களாகவும் மகாராசாவாகிய என்னால் தத்துவங் கொடுக்கப்படுகின்றது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும் செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படு கின்றது. மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலாக சகல விதமான சாமான்களும் கஜானாப்போக்கு முதலிய திறவு கோல்களும் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகின்றது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கின்றவர்கள் எல்லோரும் பூசை செய்கிறவர்களும் ஸ்தானிகர்களுமாயிருக்கிற குருக்கமார் கட்டளைப்படி நடக்கவேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப் படவேண்டும். இவர்களுக்கு மங்கள புக்களமென்னும் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர் களுக்குக் கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்கள புக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகிர்ந்து கொள்ள வேண்டியது. இவர்களினால் ஒரு காலத்திலும் கிரயத்திற்குக் கொடுக்கப்படாது. வாங்கு கின்றவர்களுக்கும் இராச சபையிலே தண்டம் விதிக்கப் படும். மற்றப் பணிவிடைக்காரர்களுக்கும் இவர்களா லேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப் பிரசாதம் அனுப்ப வேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும் என்னுடைய வம்சத்தினராலும் எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும் திரு உத்தரகோசமங்கையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சிய பரிபாலனம் செய்கின்ற இராசாக்களாலும் இந்தப் பட்டயத்தை அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப் பங்காள ராகவும் ஸ்தானிகர்களாக வும் தத்துவம் பெற்ற குருக்கமார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் விபூதி உருத்திராட்சம் அழியாமல் இருக்கும் வரைக்கும் இந்தப் பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப் படுகின்றது.

இந்தப் பட்டயத்தை ஒருவராலும் அழிக்க முடியாது. இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கின்றேன்.

இங்ஙனம்
**சோமசுந்தர சேதுபதி மகாராசா.**

இதற்கு முதற் சாட்சி எனது முதலாவது மந்திரி
இராமசாமி.
இரண்டாம் சாட்சி எனது முதலாவது சேனாதிபதி
சொக்கலிங்கம்.
மூன்றாம் சாட்சி எனது புரோகிதர்
கிருஷ்ணசாமி ஐயர்.

இந்த சாட்சிகள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முப்பத்தரண்டு குருக்கமார்களுக்கும் கொடுத்தேன். அவர்களும் தங்கள் கைச்சாத்திட்டு ஏற்றுக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதபுரத்திலேயுள்ள திரு உத்தரகோச மங்கை தேவஸ்தானத்திலேயும் ஒரு பட்டயமிருக்கும். இவ்வளவு விஷயங்களும் சோமசுந்தர சேதுபதி மகாரா சாவாகிய என்னாலேயே முப்பத்திரண்டு குருக்கமா ருக்கும் எழுதிக் கொடுத்து இதோடு பட்டயமும் கொடுக் கப்பட்டது.

**சிவசுப்பிரமணியக்குருக்கள் எழுதியது**

காஞ்சிபுரத்திலே இருந்து வந்த கல்யாணசுந்தரக் குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக் களாகிய நான் இந்த சரித்திரத்தை எழுதத் தொடங்கு கிறேன்.

எனது தகப்பன் கல்யாணசுந்தர குருக்கள், காஞ்சிபுரத்திலே இருக்கிறார். எனது தம்பிமாராகிய ஏகாம்பரக் குருக்களும் சபாபதிக் குருக்களும் காஞ்சி புரத்திலேயே இருக்கிறார்கள். நான் திரு உத்தரகோச மங்கையென்னும் இந்த இடத்திலே இருக்கிற சொக்க நாதக் குருக்கள். முதலாவது மகள் ஞானப்பூங்கோதை அம்மாளை விவாகம் செய்து இருபத்திரண்டு வருஷ காலம் முதற் பூசைப் பங்காளராக இருந்து வருகின்றேன். எனக்கு முதற் பூசைப் பங்கு வந்த காரணம் நான் விவாகம் செய்து முதல் முறை இராச சபைக்குப் போனபோது இராசாவின் பேரிலே சம்ஸ்கிருத கீர்த்தனங்களைப் பாடிக் கொண்டு போய் மகாராசா முன்பு வாசித்தேன். என்னோடு வந்த மற்றவர்கள் மகாராசாவின் பேரிலே ஒன்றும் வாசிக்கவில்லை. நான் வாசித்தவுடன் மகாராசா சந்தோஷப்பட்டு நீர் சம்ஸ்கிருதம் நன்றாக வாசித்திருக் கின்றீர். மற்றவர்கள் நன்றாய் வாசித்ததாகத் தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. ஆன தன்மையினால் நீரே இன்று முதலாக உத்தரகோசமங்கையிலேயுள்ள மங்களேசுவர சுவாமி கோயிலுக்கு முதற் பூசைப் பங்காளராக இருக்கவேண்டி யது என்று சோமசுந்தரசேதுபதி மகாராசா சொன்னார். அந்தநாள் தொடக்கம் நானே முதற்பூசைகாரனாக இருந்துவருகின்றேன். எனது மகன் கார்த்திகேயக் குருக்களின் புத்திரர் திருநீலகண்டக் குருக்கள் இவர் புத்திரர் நடராசாக் குருக்கள், இவர் புத்திரர் விசுவநாதக் குருக்கள்.

**விசுவநாதக் குருக்கள் எழுதியது**

விசுவநாதக் குருக்களாகிய எனது காலத்தில் முன்னே சொல்லப்பட்ட முப்பத்திரண்டு குருக்கமார் களில் நாலு வீட்டுக்காரர் சந்ததியின்றி அழிந்து போனார்கள். இப்போது இருப்பவர்கள் இருபத்தெட்டு வீட்டுக் காரர். இவ்விருபத்தெட்டு வீட்டுக்காரருமே பூசைப் பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வருகிறோம்.

இப்படிப் பார்த்து வருங்காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. இந்தக் கலகத்துக்குப் பயந்து எனது சிற்றப்பா மகன் வைத்தியேசுவரக் குருக்களும் எங்கள் பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் எங்களது அடுத்த பங்காளர் இரத்தினசபாபதிக் குருக் களிடம் ஒப்பித்துவிட்டு நாங்களிருவரும் எங்கள் சமுசார மும் காஞ்சிபுரம் போய் அங்கே ஒரு வருஷம் வரையி லிருந்து மறுபடியும் திரு உத்தரகோசமங்கை வந்து பார்த்தபோது பதினாறு வீட்டுக்காரரையும் காண வில்லை. இரத்தனசபாபதிக் குருக்களைக் கேட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னார் பதின் மூன்று வீட்டுக்காரர் இன்ன இடம் போனார்களென்பது தெரியவில்லை. மூன்று வீட்டுக்காரர் வைசூரியினாலிறந்து விட்டார்கள் என்ப தாகச் சொன்னாார். இப்போது இங்கே இருக்கிறவர்கள் பத்து வீட்டுக்காரர் என்பதாகவும் சொன்னார். இரண்டு வருஷகாலம் பன்னிரண்டு வீட்டுக்காரருமே பூசைப்பங் கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வந்தோம். மறுபடி இராமலிங்க சேதுபதி மகாராசா முன்பாக நாங்கள் பன்னிரண்டு பேரும் போய் பூசையை விட்டுப் போனவர்களது பங்கையும் இறந்தவர்களினது பங்கையும் பற்றி முறையிட்டபொழுது மகாராசா அவர்கள் சரிவரப் பன்னிரண்டு பங்காகப் பகிர்நது எங்களுக்குள்ளே வியாச்சியமில்லாமல் மக்களம் புக்களம் முதலிய வயற்கிராமங்களையும் பன்னிரண்டு பங்காகவே பங்கிட்டுத் தந்தார்.

அந்த நாள் முதல் நாங்கள் பன்னிரண்டு வீட்டுக் காரருமே பூசையையும் ஸ்தானிகர் வேலையையும் நடத்தி வருகின்றோம். இவ்வளவும் விசுவநாதக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எண்பத்தாறு.

**மங்களேஸ்வரக் குருக்கள் எழுதியது**

விசுவநாதக் குருக்கள் புத்திரன் காங்கேயக் குருக்கள் புத்திரர் ஆதிசிதம்பரரேசுவரக் குருக்கள் இவர் புத்திரர் மாணிக்கவாசகக் குருக்கள். இவர் புத்திரர் பரமே சுவரக் குருக்கள். இவர் புத்திரர் பாலசுப்பிரமணியக் குருக்கள். இவர் புத்திரர் கனகசபாபதிக் குருக்கள். இவர் புத்திரர் வையாபுரிக் குருக்கள். இவர் புத்திரர் சுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேசுவரக் குருக்கள். இவர் புத்திரர் குருசாமிக் குருக்கள். இவர் புத்திரர் மாணிக்கவாசகக் குருக்கள். இவர் புத்திரர் மங்களேசுவரக் குருக்கள். இவ்வளவும் மங்களேசுவரக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. நாங்கள் பன்னிரண்டு வீட்டுக்காரரும் கோவிற் பூசையை ஒழுங் காகப் பார்த்து வந்தோம்.

இப்படி நடக்குங் காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. கலகமானது ஒரு வருஷகாலம் தீராமலே நெடுக நடந்துகொண்டேயிருந்தது. இந்தக் கலகத்தை மங்களேசுவர சேதுபதி மகாராசாவினாலும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. நாங்களும் கலகத்திற்குப் பயந்து மங்களேசுவர சேதுபதி ராசாவிடம் முறையிட்ட போது அவர் கவனிக்கவில்லை. நாங்கள் சொல்லியதை மகாராசாவும் கவனியாதபடியால் நாங்களொரு வகையா லும் இங்கேயிருந்து பூசை செய்ய முடியாதவர்களாயி ருக்கிறோம்.

சொற்பகாலம் இந்தத் தேசத்தைவிட்டு கலகம் தீர்ந்த பின் மறுபடி வருவோமென்று மனதில் நினைத்துக் கொண்டு நாங்கள் நாலுவீட்டுக்காரரும் மங்களேசுவரக் குருக்களாகிய நானும் சுந்தரேசுவரக் குருக்களும் அருணாசலக் குருக்களும், இராமலிங்கக் குருக்களும் ஆகிய நாலு வீட்டுக்காரரும் மற்ற எட்டுக் குருக்கள்மார் வசம் எங்கள் பூசையை ஒப்புவித்துவிட்டு நாங்கள் நாலு பேரும் மற்றக் குருக்கள் மாரறியாதபடி எங்களிடத்தி லேயிருந்த ஆபரணம் முதலிய சாமான்களெல்லா வற்றையும் மங்களேசுவரசுவாமி கோயிலின் தெற்குப் பக்கத்திலேயிருக்கிற போக்கிலே அடக்கம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கைக் கபாட பந்தனம் செய்துகொண்டு கோயில் மகாமண்டபத்தில் ஈசானிய பாகத்திலிருக்கும் தூணில் துவாரம் செய்து அதில் திறவுகோலை வைத்து அதன் மேல் அரக்கு வைத்து அதில் யானைக் காசு முத்திரை செய்து வைத்துப் போட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக் குரக்களும் அருணாசலக் குருக்களும், இராமலிங்கக் குருக்களும் அவரவர்கள் சமுசாரமும் பிள்ளைகளும் சுவாமி தெரிசனம் செய்து அவ்வவ் விடத்தை விட்டு நீங்கினோம்.

அவ்விடத்தை விட்டு நீங்கும் போது எங்களெல் லோருக்கும் மனதிலே மிகுந்த துக்கமும், அழுகையு மாகவே இருந்தன. பிரயாணமாய்த் தெற்பசயனம் வந்து வெற்றிலை மண்டபமடைந்து, இராமேசுவரம் வந்து ஆறுமைல் தூரமுள்ள சேதுவையடைந்து, சங்கற்ப முடன் ஸ்நானம் செய்து கந்தமாதனத்தைத் தெரிசித்து சேதுமாதவரையும் சேதுகாவலனையும் தெரிசித்து வருகையில் சுத்தரேசுவரக் குருக்கள் மனைவி சேஷம்மா வைசூரி நோயாலிறந்து விட்டாள்.

சுந்தரேசுவரக் குருக்கள் புனர்விவாகம் செய்ய மனமில்லாதவராய் இருந்தார். ஆறுமாசம் வரையில் ராமேசுவரத்திலிருந்தோம். அப்போதும் உத்திரகோச மங்கையில் கலகந் தீரவில்லை. எவ்விடம் போகின்ற தென்று தெரியாமல் அதிக மன வியாகூலமாயிருக்கை யில் வித்துவசிரோன்மணியும், சைவசமயப் பிரபுவும் தனவானுமாகிய ஒருவரைக் கண்டோம். ஒருவருக் கொருவர் யோக ஷேமங்களையும் ஊர் பெயரையும் விசாரிக்கும் போது வித்துவசிரோன்மணியும் சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப் பிரபுவுமாகிய தனவான் தன்னுடைய பெயர் முத்துமாணிக்கம் செட்டியாரெனவும் தாமிருப்பது யாழ்ப்பாண மெனவும் சொன்னார். யாழ்ப்பாணமென்ற தேசம் எந்த ஜில்லாவிலேயுள்ளதென்று விசாரித்தேன்.

அவரதற்கு இராவணனால் இராச்சியம் செய்த இலங்கையிலே வடக்குப் பக்கத்திலேயுள்ள ஓர் தேசம் யாழ்ப்பாணமென்றும், பெயர் வந்த காரணம், இந்தியா வாகிய இங்கே சோழதேசத்திலே தொண்டை நாட்டி லுள்ள கவிவீரராகவனென்னும் குருடன் தனது மனைவியோடு கோபித்துக் கொண்டு இலங்கையிலே மணற்றி என்னும் இடத்திலிறங்கி செங்கடக நகரியிலே யிருக்கிற செயதுங்கவரராசசிங்கனெனப் பெயரை யுடைய இராசனது சபையையடைந்து இராசாவின் பேரிற் பாடி அந்தப் பிரபந்தத்தை முடித்தான். இராசா யாழ்ப்பாடியின் பேரிற் சந்தோஷப்பட்டு அவனுக்கு மணற்றி என்னும் இடத்தையும், யானை, குதிரை, பல்லக்கு முதலிய சாமான்களையும் கொடுத்து அனுப்பி னார். யாழ்ப்பாடி அரசனுக்குப் பல ஆசி கூறி அவற்றைப் பெற்றுக் கொண்டு மணற்றியை அடைந்து மணற்றி எங்கும் சுற்றிப்பார்த்து நல்லூருக்குச் சமீபத்திலே பாணன் என்னும் குளத்தையும் வெட்டு வித்து அவ்விடத்தில் இராச்சியத்தை நடத்தினான். தான் பரிசாகப் பெற்ற இடத்திற்கு "யாழ்ப்பாணம்" என்னும் பெயரை வைத்து அரசாட்சி செய்தான்.

அந்த யாழ்ப்பாணத்திற்கு வடமேற்குப் பக்கமாய் சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலேயுள்ள ஊர்காவற்றுறைக்குச் சமீபமாக, இப்போ இருக்கிறவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமசேதுமகாராசாவின் மகன். இவ்வரசன் இருந்த இடம் இப்பொழுதும் இராசாவின் தோட்டம் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றது. குளக்கோட்டு மகாராசாவினால் "வியாவில்" என்னுமிடத்திற் கட்டப் பட்ட ஐயனார் கோவிற் பூசைக்கு குருக்கமாரை அழைத் துவரும்படி குளக்கோட்டுமகாராசா என்னை அனுப்பி னார். குருக்கமாரை அழைத்ததற்கு வந்து சேர்ந்தேன். என்று சொல்லியதைக் கேட்ட நான் யாழ்ப்பாணம் போவதே நல்லதென்று மனதிலே தீர்மானம் செய்து கொண்டு என்னோடு வந்த மூவரையும் கேட்டேன். கேட்டதற்கு அருணாசலக் குருக்களும், இராமலிங்கக் குருக்களும் தாங்கள் யாழ்ப்பாணம் வரவில்லையென்று சொல்லி விட்டார்கள். சுந்தரேசக் குருக்கள் என்னோடு யாழ்ப்பாணம் வருவதாகச் சொன்னார். முத்து மாணிக்கஞ் செட்டியாருக்கு நான் சொல்லியது என்ன வானால் நாங்களிரு வரும் சம்சாரசகிதமாய் உம்மோடு யாழ்ப்பாணம் வருகின்றோம். நீர் வேறோரிடமும் குருக்கள்மாரை அழைக்கப் போகவேண்டாம் என்று சொல்லியதை முத்துமாணிக்கஞ் செட்டியார் கேட்டு மிகச் சந்தோஷப்பட்டு நான் உங்களையே அழைத்துப் போவதாக மனதிலே நினைக்க நீங்களாகவே யாழ்ப் பாணம் வருகின்றோமென்றது எனக்கு மிகச் சந்தோஷ மாயிருக்கிறது. ஆனபடியால் காவிரிப்பூம்பட்டினத் துள்ள எனது தாய் தந்தையரது தபத்தினாலும் இராமலிங்கப் பெருமானுடைய அனுக்கிரகத்தினாலும் நான் குருக்கள்மாருக்குத் தேடித்திரிந்து அலையாமல் நீங்கள் வருகிறோமென்று சொல்லியது மிகச் சந்தோ ஷம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் காவிப்பூம்பட்டிணத்திற்குப் போய் எனது தாய் தந்தையரைக் கண்டு வருகின்றேன். அதுவரையும் நீங்கள் இவ்விடத்திலிருக்கலாம் என்று சொன்னார். எங்களுக்குத் தான் வருமளவும் செலவுக்குக் காசு தந்து விட்டுப் போய்விட்டார்.

போய்த் தனது ஊரிலே இரண்டு மாசம் வரையில் நின்று மறுபடி இங்கே வந்தார். வந்தவுடன் சுந்தரே சுவரக் குருக்களைப் புனர்விவாகம் செய்து கொண்டே யாழ்ப்பாணம் வரவேண்டு மென்று சொன்னார்.

அதற்கவர் சம்மதியாமல் மறுத்தார். நானும் செட்டியாரும் சொல்லியது நீர் கட்டாயம் விவாகம் செய்ய வேண்டியது என்று சொல்லி நானே விவாகச் செலவைத் தருகின்றேனென்றும் செட்டியார் சொன் னார்.

சுந்தரேசுவரக் குருக்களும் இதற்குடன்பட்டுச் செட்டியாரிடம் காசு வாங்கிக்கொண்டு நானும் எனது சம்சாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் திருவை யாற்றுக் குப் போய் அங்கே பஞ்சநாதேஸ்வரக் குருக்களின் இரண் டாவது புத்திரி அமிருதாம்பிகை அம்மாளை விவாகம் செய்து அவ்விடம் ஒரு மாசம் வரையிலிருந்து மறுபடி இராமேசுவரம் வந்தோம்.

செட்டியாரைக் கண்டு யாழ்ப்பாணம் எப்போ போவது என்று கேட்டேன், அதற்கவர் பரிசாரகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணரைச் சம்பாதித்துக் கொண்டு புறப்படு கின்றதென்று சொன்னார். நான் மனதிலே யோசனை செய்து உத்திரகோசமங்கையிலே கலகமிருக்கின்றபடி யால் அங்கே போனால் பரிசாரகப் பிரமாணரைக் கொண்டு வரலாமென்று சொன்னேன். அதைச் செட்டி யார் கேட்டு நீங்களுமென்னுடன் வந்தால் இலகுவிற் கொண்டுவரலாமென்று சொன்னார்.

செட்டியார் எங்களெல்லோரையும் எங்கள் விடுதியில் விட்டு எங்களுக்குச் செலவுக்கு ரூபாய் தந்துவிட்டுச் சேதுவிலே போய்த் தீர்த்தமாடிக் கந்தமா தனத்தைத் தெரிசித்து இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தனி அம்மாளையும் தெரிசித்து வந்து எங்கள் விடுதியிலேயே இருந்தார். இரண்டு நாள் சென்ற பின் யாழ்ப்பாணம் போவோமென்று யோசனை செய்தார். அப்படி யோசனை செய்துகொண்டிருக்கும் போது முத்துமாணிக்ககம் செட்டியார் கப்பலில் கொழும்பு சென்றிருந்த தைரிய லட்சுமி என்று பெயர் தரித்த கப்பல் பாம்பன் வந்துவிட்டதாக மாலுமி வழியாலறிந்து சந்தோஷமடைந்து என்னோடு நாங் களினி யாழ்ப்பாணம் போவதற்குப் புறப்படுவோ மென்று சொன்னார். நானுமதற்குடன்பட்டு நானு மெனது சமுசாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் சமுசாரமும் வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் அவர்களின் சமுசாரங்களும் பாம்பனை அடைந்தோம்.

செட்டியாரும் அவர் சமுசாரமும் பிள்ளைகளும் அவர்களது தேசத்திலிருந்து கொண்டுவந்த விக்கிரகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கொண்டு பாம்பனை அடைந்தார். எல்லோரும் நித்யகர் மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலை ஏழு மணிக்குக் கப்பலில் ஏறிப் பிரயாணமாய் சேதுக்கரையைக் கண்டு, அது மறைந்த பின் கச்சைதீவு கண்டு அது மறைய பின் சஞ்சீவி என்னும் பொற்சீந்திலையுடைய நீடித்த ஆயுளைத் தாங்கும் மானிடரைப் பெற்ற பூமியாகிய நெடுந்தீவு கண்டு, அது மறைய நாகர்தீவு பப்பரவாகன் சல்லியன் குடியில் எழுந்திருக்கும் நாகபூஷணி அம்மாள் கோயிலில் கோபுரசிகரத்தையும் நாகஞ் சுற்றிய கல்லையும் கண்டு, பின் நாகேசுரன் கோயிலைக் கண்டு அதன் பின் அனலைதீவு கண்டு, பின் ஏழுகடல் ஒருமித்துச் சேரும் சுளிக்குப் பாகமாயிருக்கும் எழுவைதீவு கண்டு அதன்பின் பவளப் பூச்சிகளாலும் வருணராசன் முருகைக் கற்களாலும் உண்டுபண்ணிய காரைதீவு கண்டு, ஊர்காவற்றுறை என்னும் துறைமுகத்தையடைந்து கப்பலை விட்டிறங்கினோம்.

ஊர்காவற்றுறையிலேயே நின்றுகொண்டு செட்டியாரவர்கள் எங்கள் வரவையும் தனது வரவையும் ஏவலாளர்களால் இராசாவுக்கு அறிவிக்க அரசர் சதுரங்கசேனைகளுடன் செட்டியாரையும் எங்களையுமடைந்து எங்களை முத்துப் பல்லக்கிலும் தானும் செட்டியாரும் முத்துச் சிவிகைகளிலுமமர்ந்து சதுரங்க சேனைகளுடனும், சகல வாத்தியங்களுடனும் இராச மாளிகையை அடைந்தோம். எங்களை முத்துப் பல்லக்கிலிருந்து இறங்கும்படி செய்து, தாங்களுமிறங்கி இராச மாளிகையை அடைந்து எங்களுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து வேண்டிய திரவியங்களும் தந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் எங்களை முத்துப்பல்லக்கிலேற்றி தாங்களும் முத்துச்சிவிகைகளிலேறி வியாவில் என்று வழங்கும் பதியையடைந்து புதிதாய்க் கட்டப்பட்ட ஐயனார் கோயிலுக்கு ஈசான்ய பாகத்திலே எங்களுக்காகவும் கட்டப்பட்ட மடவழாகத்திலே எங்களை இறக்கித் தாங்களுமிறங்கி நாங்கள் ஸ்நானம் பூசை போசனம் முடித்தபின் அவர்கட்குமன்னங் கொடுத்து அவர்கட்கு வேண்டிய உபசரணைகள் செய்து அனுப்பினோம். சில நாட்கள் சென்றபின் இராசா எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார். நாங்களிருவரும் இராச சபையை அடைந்து அரசர்க்கு முன்பாக இருந்து அதாவது முதல் நாளிகேரதாடனம் பண்ணினோம். நாளிகேரதாடனம் பண்ணும்போது கௌளி சொல்லியது, கெவுளிச் சாஸ்திரம் பார்த்தோம். அது நல்லாயிருக்கவில்லை. கெவுளியின் பலனை அரசர்க்குச் சொன்னோம். இராசாவும் இன்றையிற் தினத்தைவிட்டு இன்னொரு நாளைக்கு முகூர்த்தம் வைப்போமென்று எங்களை அனுப்பிவிட்டார்.

ஒரு மாசம் சென்றபின் மறுபடியும் எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார்கள். நாங்களும் அவ்விடம் போய் அரசர் முகதாவில் முகூர்த்தம் வைக்க ஆரம்பித்து நாளிகேர தாடனம் செய்தோம். நாளிகேரம் கவிழ்ந்து போய் விட்டது. அதையும் அரசர்க்றிவிக்க அரசர் வெகுவாய் யோசனை செய்துவிட்டு,

கோயில் கட்டி வெகுகாலமாகிவிட்டது. ஆனபடியால் கும்பாபிஷேகம் செய்யாமலிருக்கிறதே துர்ச்சகுன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய் வந்தது போலும். ஆனபடியால் முகூர்த்தம் வைப்பதே நல்லது. மறுபடி ஒரு தேங்காயெடுத்து உடைத்து வைத்து முகூர்த்தம் வைக்கத் தொடங்கி னோம். அதாவது, பிரபவாதி 36. பிலவ வருடம் வைகாசி மாதம் 25ஆந் திகதி வெள்ளிக்கிழமையும் திருவோண நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத் திலே செய்யலாமென்று சொன்னோம். அதை இராசா கேட்டு முத்துமாணிக்கம் செட்டியாரை ஸ்தானிகராய் நியமித்து அவர் விருப்பப்படி கும்பாபிஷேகத் தைச் செய்யும்படி சொன்னார்கள்.

முத்துமாணிக்ககச் செட்டியாரிரு மிதற்குடன் பட்டு எங்களால் வைக்கப்பட்ட முகூர்த்தத்திலே கும்பா பிஷேகத்தைச் செய்து பூசை உற்சவம் முதலியவைகளும் கிரமமாய் நடத்தி வந்தோம். வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகஞ் செய்த தினம் கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றுமூன்று சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைஞ் ஞூற்றுப் பதினெட்டு. பிரபாவதி வருஷம் முப்பத்தைந் தாவது பிலவ வருடம் வைகாசி மாசம் 25ந் திகதி நடைபெற்றது.

சொற்பகாலஞ் சென்றபின் மகாராசா அவர்களால் எங்களிருவருக்கும் செப்புப்பட்டயம் தரப்பட்டது. அந்தச் செப்புப் பட்டயமாகிய சாதனத்திலே எழுதிய வாசகம். இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வடமேற்குப் பக்கமாய் சமுத்திரத்தாற் சூழப் பெற்ற காரைதீவிலே வியாவில் என்னுமிடத்தில் இந்தியாவில் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து வந்து இப்போ காரைதீவிலே ஊர்காவற்றுறையில் இருக்கிற வரராம சேதுமகாராசா மகன் குளக்கோட்டு மகாராசாவாகிய என்னால் முதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிய இடத்திற் கட்டுவிக்கப்பட்ட ஐயனார் கோவிலுக்குப் பூசகராயிருக்கிற திரு உத்தரகோசமங்கையிலிருந்து என்னால் அழைக்கப்பட்ட மங்களேசுவரக் குருக்களுக்கும் எழுதுகின்ற சாதனம்: கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றைந்து சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைந் நூற்றிருபது. பிரபாவதி வருஷம் முப்பத்தேழாவது சோபகிருது வருஷம் சித்திரை மாசம் 10ந் திகதி வெள்ளிக்கிழமை உத்திர நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாதனம். மேலே சொல்லப்பட்ட குருக்கள்மார் இருவருக்கும் தங்களிஷ்டப் படி நித்திய நைமித்தியம் காமியம் முதலிய சகல கிரியைகளையும் செய்யவும் செய்விக்கவும் புராணம் வாசிக்கவும் முத்துமாணிக்கஞ் செட்டியாருக்குப் பிறகு ஸ்தானிகராகவும் கோயிலுக்குரிய சகல காரியங்களையும் செய்கிறவர்களாகவும் தங்களிஷ்டப்படி செய்விக்கின்றவர்களாகவும் தத்துவம் பெறுகிறார்கள். இத்தத்துவமானது என்றும் எனது சந்ததியாராலும் அழிக்கப்படாது குருக்கள்மாருக்கும் அவர்கள் சந்ததி உள்ள வரைக்கும் மேலே சொல்லிய தத்தவமானது குளக்கோட்டு மகாராசா என்னும் பெயரையுடைய நான் எனது கையொப்பமிட்டுக் கொடுக்கிறேன். எனது கையொப்பம் குளக்கோட்டு மகாராசா. முதலாஞ் சாட்சி சி. முத்துமாணிக்கஞ் செட்டியார். இரண்டாஞ் சாட்சி வைத்தியனாதபிள்ளை இராமமுப்பிள்ளை, மூன்றாஞ் சாட்சி நாராணயப்பிள்ளை கந்தப்பிள்ளை. இவர்கள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முடித்து ஒரு பிரதியை நான் எடுத்துக்கொண்டு மற்ற இரண்டையும் இரண்டு குருக்கள்மாரிடமும் கொடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் தங்கள் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்டார்கள். இராசா அவர்கள் தந்த செப்புப் பட்டயத்தை நாங்கள் பெற்றுக் கொண்டு கோயிற்பூசையையும் மிக ஒழுங்காய் நடத்திவந்தோம். சொற்ப காலஞ் சென்றபின் எனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். முதலாவது புத்திரி மங்களாம்பிகை அம்மாள். இரண்டாவது புத்திரன் சூரியநாராயணக் குருக்கள். மறுபடியுமிருவரும் பூசை செய்துகொண்டு வந்தோம். எனது மகனுக்கு விவாகம் செய்கிறதற்கு இந்தியாவிற்குப் போய் இராமநாதபுரத்திலேயுள்ள சொக்கநாத கோயிலருச்சகர் வேதாரண்யேசுவரக் குருக்களின் இரண்டாவது மகன் சேதுமாதவக் குருக்களுக்கு நமது பெண்ணை விவாகம் செய்துவிட்டு வந்தேன்.

மறுபடியும் சிறிது காலஞ் சென்றதன்பின் சுந்தரேசுவரக் குருக்களைப் பூசைக்கு வைத்துவிட்டு நானும் மனைவியும் மகனும் இந்தியாவுக்குப் போய் இராமநாதபுரத்தை அடைந்து மகனையும் மருமகளையும் அழைத்துக்கொண்டு கும்பகோணம் போய் உத்தரகோச மங்கையிலிருந்து என்னோடு புறப்பட்டுப் போன அருணாசலக் குருக்கள் மூன்றாம் புத்திரி உருக்குமணியம்மாவை விவாகம் செய்துவிட்டு அவ்விடம் இரண்டு மாசம் வரையிருந்தோம். எங்களோடு உத்தர கோசமங்கையிலிருந்து புறப்பட்ட இராமலிங்கக் குருக்கள் எவ்விடம் போனாரென்று அருணாசலக் குருக்களைக் கேட்டேன். அவரதற்கு எனது சம்சாரம் கும்பகோணத்திலே யுள்ளது. நான் இங்கே வந்துவிட்டேன். அவரது தாய் செருத்தணியிலேயுள்ளாவர். அவரும் சம்சாரமும் பிள்ளைகளும் அங்கே போய்விட்டார்கள் என்று சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடி நானும் சம்சாரமும் மகளும் மருமகனும் மகனும் மருமகளும் கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்டு இராமநாதபுரம் வந்து அங்கே மகளையும் மருமகனையும் அனுப்பி விட்டு நாங்கள் நால்வரும் யாழ்ப்பாணம் வந்தோம். இங்கே வந்து எங்கள் பூசைப்பங்கையும் ஊர்க்காரியங்களையும் நானும் எனது மகனும் பார்த்து வந்தோம். சுந்தரேசுவரக் குருக்களும் எங்களோடு ஒற்றுமையாய் தனது பங்கைப் பார்த்து வருகிறார். இப்படியாக இருபத்தைந்து வருடங்களாகப் பார்த்து வருகின்றோம். இவ்வளவும் மங்களேசுவரக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு இப்பொழுது வயது அறுபத்தெட்டு.

**சூரிய நாராயணக் குருக்கள் எழுதியது**

இப்படியாக நாங்கள் மூவரும் பூசையையும் ஊர்க்காரியங்களையும் பார்த்து வந்தோம். சில வருஷம் சென்ற பின் எனது பிதா மங்களேசுவரக்குருக்கள் இறந்துவிட்டார். நானுமெனது தமையனாரும் கோயிற் பூசை செய்து வரும் காலத்தில் தமிழ் இராச்சியம் போய் விட்டது. முத்துமாணிக்கம் செட்டியாரும் இறந்து விட்டார். போர்த்துக்கீசர் என்னும் பறங்கியர் கிறீஸ்து வருஷம் 1618ஆம் ஆண்டு காலயுத்தி வருஷம் ஊர்காவற்றுறைக்கு வந்தார்கள். அநேக சைவசமயக் கோயில்களை இடித்துப்போட்டார்கள். இங்கேயுள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுரவாசலிற் கதவைத் திறக்கப்போனார்கள். அவர்களின் வாயிலிருந்து இரத்தம் புறப்பட்டு இறந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பயத்தினால் மறுபடி கோயிலை இடிக்க வரவில்லை. பறங்கியரசு வந்து ஒரு வருஷத்தின் மேல் பெரிய அம்மைநோய் வந்தது. அந்த நோயால் ஊர்களிலனேகம் பேர் இறந்து விட்டார்கள். அந்த நேரத்தில் எனது தமையனார் சுந்தரேசுவரக் குருக்களும் அவர் மனைவியும் இறந்துவிட்டார்கள். இங்கே வேறு குருக்கமார் ஒருவருமில்லை. நானும் வடகலை வைஷ்ணவப் பிராமணருமாக இருந்தோம். சுந்தரேசக் குருக்களுக்குப் பிள்ளைகள் இல்லாதபடியால் அவரது சந்ததி அவ்வளவில் அற்றுப்போயிற்று. அம்மைநோய் அகலுவதற்காக முத்துத்தாண்டவரென்பவர் மணற்காடு என்றழைக்கப்படும் இடத்தில் ஓர் முத்துமாரி ஆல யத்தை ஒரு மாதத்திற் கட்டி முடித்து என்னைக் கொண்டு கும்பாபிஷேகமும் செய்வித்துத் திருவிழா வேள்வி முதலியவைகள் செய்து முடிய அம்மைநோயும் குறைந்து விட்டன. பறங்கிகள் தங்கள் சமயத்தின்படி எத்த னையோ ஆராதனை செய்தும் நோய் குறையவில்லை. ஆனபடியால் நாங்கள் செய்த வழிபாட்டைத் தடுக்க முயலவில்லை.

ஐயனார் கோயிற் பூசையையும் மாரிஅம்மன் கோயிற் பூசையையும் நானே செய்து வருகின்றேன். சொற்பகாலம் சென்ற பின் எனக்குக் கனகசபாபதிக் குருக்கள் பிறந்தார். பறுவதம் என்னும் பெண் பிள்ளை யும் பிறந்தது. இவ்வளவும் சூரியநாராயணக் குருக்க ளாகிய என்னால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனகசாபாபதிக் குருக்கள் எழுதியது**

எனது தகப்பன் சூரியநாராயணக் குருக்கள் இறக்கும் போது நானுமெனது சகோதரியும் தாயும் பரிசாரகப் பிராமணர்களுமேயன்றி வேறொருவரும் காரைதீவில் இல்லை. நானே இரண்டு கோயிற் பூசையை யும் செய்து வந்தேன். கொஞ்சக்காலத்தின் பின் எனது சகோதரிக்கு கீரிமலையிலே உள்ள சுப்பிரமணியக் குருக்களின் மகன் மகாதேவக் குருக்களை மணம் செய்து வைத்தேன். நானும் அவரது மகள் பறுவத அம்பாளை விவாகம் செய்தேன். நானுமெனது மைத்துனனுமாக இங்கேயுள்ள கோயிற் பூசைகளையும் ஊர்க்காரியங் களையும் பார்த்து வந்தோம். பின்னர் போர்த்துக்கீச ராச்சியம் போய் ஒல்லாந்தராச்சியம் வந்தது. அவர்கள். கிறிஸ்து வருஷம் **1658**ஆம் ஆண்டு விளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர்காவற்றுறையைப் பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாசத்திற்குள் அநேக சைவசமயக் கோயில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்கவந்தபோது நாலுபேர் கண் தெரியாதவர்களாயும் இரண்டு பேர் நடக்க மாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக் காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போனபிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும் போது ஒருநாள் வந்து கோயிலையும் இடித்து கடலுக்குள்ளே ஓர் கோட்டையையும் கட்டி னார்கள்.

அதன் பின் நிலஅறையில் விக்கிரகங்களுக்குப் பூசை செய்வதையறிந்து சுவாமி எல்லாவற்றையும் கோயிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமான்கள் சகலத்தையும் கிணற்றுக்குள்ளே போட்டு "வீரன்" என்பவனையும் வெட்டி பலிகொடுத்துப் போய்விட்டார்கள். தேரையும் வாகனங்களையும் கடலிலே விட்டுவிட்டார்கள். ஆபரணங்களெல்லா வற்றையும் எடுத்துக் கொண்டார்கள்.

இப்படி இருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்கவேண்டிய கட்டளைச் சட்டமிருப்பதால் அவர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து "தாமன்" என்னும் பெயர் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். குருக்கள் என்று பெயர் வைக்கப்படாதெனவும் சொன்னார்கள். எங்கள் சாதியில் குரு இருக்கிறதேயன்றி மற்றச் சாதியில் இருக்கப் படாதெனவும் சட்டம் வைத்து இருந்தபடியால் எங்களுக்குரிய கிரியைகளை இரகசியமாய் முடித்து "தாமோதர ஐயர்" எனப் பெயர் வைத்து வளர்த்து வந்தேன்.

சைவ சமயம் என்ற பேச்சு அவர்களின் காதிற் கேட்கப்படாது. வீபூதியும் பூசப்படாது. நான் பகலில் எங்களுக்குரிய காணிகளை உழுதுவித்து வேலை செய்து பொழுதுபோனபின் வீடு வந்து இரகசியமாய் வீட்டுக் குள் இருந்து பூசை முதலியவைகளை முடித்துப் பின்னே சாப்பிடவேண்டும். இந்தக் கொடுமைகளைத் தாங்க ஏலாது பரிசாதகத்திற்கு வந்த வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் சமசாரமும் பிள்ளைகளும் இந்தியா வுக்குப் போய்விட்டார்கள். நான் "வியாவில" என்னும் இடத்தைவிட்டு "மணற்காடு" மாரி அம்மன் கோயிலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வந்து இருந்தேன். மாரி அம்மன் கோயிலையும் இரண்டுமுறை இடிக்கவந்தும் அம்மை நோயின் பயத்தால் இடிக்காமல் போய் விட்டனர்.

என்னையும் பூசை செய்யப்படாதெனத் தடுத்தனர். நான் ஒருநேரப் பூசை தவறினாலும் முத்துமாரி அம்மை வருவிப்பள். அதற்குச் சாட்சி கோயிலிடிக்க வந்தபோது உங்களுக்குத தெரியும். உங்களுக்கேன்றி இங்கேயுள்ள மற்றவர்களுக்கு அம்மை வந்ததில்லை. இந்தக் கோயிற் பூசைக்காகவே நான் இங்கே இருக்கிறேன். அல்லாவிடின் இந்த ஊரை விட்டுப் போய் விடுவேன் என்று சொல்ல ஒன்றும் பேசாது போய் விட்டார்கள்.

பின் எனது மகனுக்கு விவாகம் செய்ய நினைத்து கீரிமலையிலே உள்ள எனது சகோதரியின் மகள் நாராயணி அம்மாளை விவாகம் முடித்து நானும் மகனுமாய்ப் பூசை செய்து வந்தோம். அந்த நாளில் மாரியம்மன் கோயிலைக் கட்டிய முத்துத்தாண்டவ முதலியார் மகன் இராசரத்தின முதலியார் அவர் மகன் வரராசசிங்க முதலியாரால் எனது மகனுக்கு ஓர் உறுதி எழுதப் பட்டது.

அவ்வுறுதி எப்படியெனில் 1749ஆம் ஆண்டு பங்குனி மாதம் திங்கட்கிழமை பூருவபக்கத்திருதிகையும், சோதி நட்சத்திரமும் கொண்ட சுபமூகூர்த்தத்தில் எழுதிய சாசனத்தின் வாசகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த ஐயமார்களே தங்களிஷ்டப்படி இந்தக் கோயிலிலே புராணம் வாசிக்கவும், பூசை திருவிழா நடத்தவும், வேள்வி செய்யவும் அதிகாரமுடையவர்களாய் இருக்கிறார்கள். இக்கோயிலில் ஆராதனைக்காக வரும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பணத்தைக் குறித்த ஐயமாரே ஏற்று அதை இக் கோயிலின் விருத்திக்காக உபயோகிக்கும் அதிகாரமுடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வதிகாரமானது இவருக்கும் இவர் சந்ததி உள்ள வரைக்கும் சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் வரராசசிங்க முதலியாராகிய என்னால் தாமோதர ஐயருக்கு கொடுக்கப் பட்டது.

வரராசசிங்க முதலியார் கையொப்பம்.
சாட்சிகள்: சங்கரன் சேதுவன்
சங்கரன் கதிர்காமன்.

இந்த உறுதி எழுதி முடித்த சிறிது காலத்தின் பின் எனது மகனுக்குப் பிள்ளைகள் பிறந்தன. முதலாவது மகன் - கண்டோபண்டித ஐயர்.

ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். எனது மூத்த பேரனுக்கு மேருகிரி ஐயருடைய வம்சத்திலே உள்ள கணபதி ஐயருடைய மகள் உமை அம்மாவை விவாகம் செய்து வைத்தேன். இவ்வளவும் கனகசபாபதிக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எழுபத்திரண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டோபண்டித ஐயர் எழுதியது**

எனது பேரன் தாமோதர ஐயர் அவருடைய பிள்ளைகள் ஐந்துபேர். அவருடைய முதல் மகன் கண்டோபண்டித ஐயராகிய நான் எனது தகப்பன் மற்ற நால்வரில் இரண்டாவது மகன் புங்குடுதீவுக்கும் மூன்றாவது மகன் சுன்னாகத்திற்கும், நாலாவது மகன் அராலிக்கும் ஐந்தாவது மகன் இணுவிலுக்கும் போய் விட்டார்கள். எனது தகப்பன் காலத்திலே ஒல்லாந்தர் இராச்சியம் போய் இங்கிலீசு இராச்சியம் 1795இல் வந்து விட்டது.

**முத்தையா எழுதியது**

எனது தகப்பனாருக்கு எனது பிரபிதாமகர் கனகசபாபதிக் குருக்கள் விவாகம் செய்து வைத்தார். எனது தகப்பனுக்கு நாலு பிள்ளைகள்.

(க) முத்தையா

(உ) அரங்கையர்

(ங) சுப்பையா

(ச) தெய்வயானை அம்மாள்.

எனது தகப்பனாகிய கண்டோ பண்டித ஐயர் முத்தையாவாகிய எனக்கு கோதாவரியிலே இருந்துவந்த மேருகிரி ஐயருடைய சந்ததியிலே உள்ள சுப்பையரு டைய (க) மகள் இலட்சுமி அம்மாளையும் எனது தம்பி அரங்கையருக்கு (உ) மகள் பாறுவதி அம்மாளையும் எனது இரண்டாவது தம்பி சுப்பையருக்கு சுப்பையரு டைய மகள் சானகி அம்மாளையும் எனது சகோதரி தெய்வயானை அம்மாவுக்கு சுப்பையருடைய மகன் கதிரேசஐயரையும் விவாகம் செய்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விவாகம் செய்து (கரு) வருஷம் வரையில் பிள்ளையில்லாதிருந்தது நான் வெகுமனத்துக்கமுடையவனாய் இருக்கும்போது திருச்செந்தூருக்குப் போய் கந்தசஷ்டி விரதம் இருப்பதாக எனது தகப்பனாருக்கு அறிவித்தேன். அவர் எங்கள் சந்ததித் தலைவராகிய மங்களேசுவரக் குருக்கள் திரு உத்தர கோசமங்கையிலுருந்து வரும் போது அவ்விடம் வைத்து விட்டு வந்த சுவாமியின் ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் எடுத்துக் கொடுத்து விட்டு வரும்படியும், அவர் ஆங்கே மறைத்து வைத்துவிட்டு வந்தமையால் இங்கே அவர் பட்ட கஷ்டம் முதலியவற்றையும் "சிவசொத்து குல நாசம்" என்பதற்கு சந்தேகமில்லை என்பதையும் தந்து எனக்கு வேண்டிய பொருளும் தந்து, போய்வருமளவும் என்னோடு ஆட்களையும் தந்து எனக்கும் என் சமுசாரத்துக்கும் ஆசீர்வாதம் செய்து ஊர்காவற்றுறை வரைக்கும் எங்களோடு வந்து எங்களைக் கப்பலேற்றி விட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

நாங்கள் பிரயாணமாய்ப் பாம்பன் வந்து பாம்பனிலே இறங்கி, இராமேசுவரத்துக்குப் போய் அங்கேயுள்ள ஆரியப் பிராமணப் பிள்ளையை அழைத்துக் கொண்டு (கரு) மைல் தூரமுள்ள சேதுவையடைந்து, ஆரியரைக் கொண்டு சங்கற்பம் செய்வித்து தீர்த்த ஸ்நானம் செய்து இராமேசுவரத்தையடைந்து, இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தினி அம்மாளையும் தெரிசித்து, சேதுமாதவரையும் சேதுகாவலரையும் தெரிசித்து அவ்விடத்தில் ஐந்து நாளிலிருந்து ஐந்தாவது நாள் உவதீர்த்த ஸ்நானமும் கோடி தீர்த்தமும் ஸ்தானமும் கோடி தீர்த்தமும் ஸ்நானமும் செய்து ஆசாரியருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னாலியன்ற தெட்சணையும் கொடுத்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று அந்த இடத்தை விட்டு நீங்கி மறுபடியும் பாம்பன் வந்து ஓடம் வழியாய் வெற்றிலை மண்டபம் சேர்ந்து திருப்புராணி தெற்பசயனம் போய் அங்கிருந்து பிரயாணமாய் உத்த ரகோ சமங்கையை அடைந்தோம்.

ஆதிசிதம்பரக் குருக்கள் வீட்டிலேயே விடுதி எடுத்து இருந்தோம். இருக்கும் போது ஆங்கேயுள்ள குருக்கமார்களுடைய சரித்திரத்தை விசாரித்தேன். ஆதி சிதம்பரக் குருக்கள் சொல்லுவது - முன் முப்பத்திரண்டு வீட்டுக்காரர்களிருந்ததாகவும், இங்கே கலகம் நடந்த போது பதினெட்டு வீட்டுக்காரர் இன்ன இடம் என்பது தெரியாமற் போய்விட்டார்களென்றும் மறுபடி (கஉ) வீட்டுக்காரர் இருந்ததாகவும் அப்போ நான்கு வீட்டுக் காரர் இவ்விடத்தை விட்டு வெளிக்கிட்டு ஒரு பகுதியார் கும்பகோணத்திற்கும் இன்னொரு பகுதியார் செருத் தணிக்கும் இரண்டு வீட்டுக்காரர் யாழ்ப்பாணமும் போய்விட்டார்களென்றும் இங்கேயுள்ளவர்கள் சொல் லுகிறார்கள். இப்போ இங்கே இருப்பவர்கள் ஏழு வீட்டுக்காரர் என்பதாகவும் சொல்லி இதெல்லாவற்றை யும் நீர் விசாரிக்கிறீர் என்று என்னையும் கேட்டுவிட்டு என்னுடைய கோத்திர சூத்திரத்தையும் விசாரித்தார். நானும் என்னுடைய கோத்திர சூத்திரத்தைச் சொல்லிச் செப்புப் பட்டயத்தையும் எடுத்துக் காண்பித்தேன். அதன் பிற்பாடு அவர் என்னைத் தங்களோடு சமபந்தி யாய் வைத்துப் போசனஞ் செய்தும் மிக்க மரியாதையும் வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அங்கேயுள்ளவன் என்பதை அறிந்தபிற் பாடு அங்கேயுள்ள சனங்களுக்கு இருந்த சந்தோஷம் அளவில்லை. நான் கொண்டுபோன ஏட்டையும் வாங்கிப் பார்த்து சுவாமியின் ஆபரணம் முதலிய சாமான்கள் இருக்கிற இடத்தையும் திறவுகோல்கள் வைத்த இடத்தையும் அறிந்து என்னை அச்சாமான்களை எடுத்துத் தரும்படி கேட்டார்கள். நானுமதற்குடன் பட்டு முத்து இராமலிங்கம் என்னும் பெயரையுடைய சேதுபதி மகாராசாவை அழைப்பித்து அங்கேயுள்ள குருக்கள்மார் மற்றுஞ் சனங்களெல்லாரையும் அழைப் பித்து மங்களேசுவர சுவாமிக்கும் மங்களாம்பிகை அம்மனுக்கும் விசேஷபூசை அபிஷேகம் செய்த பிற்பாடு மகாமண்டபத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதாகவும் அதுக்குள்ளே துவாரஞ் செய்து திறவுகோல் வைத்திருப் பதாகவும் ஏட்டிலே எழுதியிருக்கிறது என்பதை சேதுபதிக்கு அறிவித்து சேதுபதியும் நானும் அங்கே யுள்ள குருக்கள்மார் முதலிய எல்லோரும் மகாமண்ட பத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணுக்குச் சமீபமாகப்போய் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதை எல்லாருமாகப் பார்த்து யானைக்காசு முத்தி ரையை நானேறுயுடைத்து அதன்மேல் அரக்கு மெழுகு எடுத்து அதன்மேல் திறவுகோலை எடுத்து மங்களேசுவர சுவாமி கோயிலில் தெற்குப் பக்கத்திலே இருக்கிற போக்கை அறிந்து அங்கே போய் போக்கைத் திறந்து போக்குள்ளே எல்லாரும் போய் இரும்புப் பெட்ட கத்தைத் திறந்த போது அதற்குள்ளே சிறு தயிலாப் பெட்டி இருப்பது கண்டு அதை எடுத்துத் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கையில் தங்க ஆபரணங்கள், வெள்ளி ஆபரணங்கள், பதக்கங்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். முத்துமாலைகளும், பட்டுக்களும் பழுதாய்விட்டன. குடை, கொடி, சுருட்டி, முதலியவைகளும் பழுதாய் விட்டன. செம்பு, இரும்பு, பித்தளை, வெண்கலம் முதலிய சாமான்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். எல்லாச் சாமான்களையும் சுவாமி சந்நிதானத்திற்குக் கொண்டுபோய் நகை முதலியவைகளை சுவாமிக்குச் சாத்தி மகா உற்சவம் நடாத்திய பிற்பாடு ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் சேதுபதிராசா முகதாவில் ஒப்பிக்கும் போது உமது முன்னோர் இருந்து நடாத்தினபடியே நீரே இருந்து இந்தச் சாமான்களையும் வைத்துக் கொண்டு இருக்கும்படியாகவும் எமது பிள்ளைகளுக்குப் பூசைப்பங்கைத் தருகிறதாகவும் இராசாவும் குருக்கள்மார்களும் கேட்டார்கள். இப்போ நம்முடைய பூசைப்பங்கை மற்றக் குருக்கள்மார்கள் செய்து தருவதாகவும் என்னைக் கேட்டார்கள். நானதற்குச் சொல்லியது யாத்திரை செய்வதாக வந்தேனேயன்றிப் பூசைப்பங்குக்காக வரவில்லை யென்றும் இந்தச் சாமான்களை நான் அறிந்துகொண்டு எடுத்துத் தராமற்போனால் எனக்கு மகாபாதகம் வருமென்றும் நான் சொன்னேன். சொல்லியதை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். இன்று முதலாக எனது பேருக்கு மாதம் அருச்சனை செய்யவேண்டு மென்று அதற்குரிய காசையும் கொடுத்து மறுபடியும் நாலைந்து நாள் அவ்விடத்திலிருந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாகும் போது அங்கேயுள்ளவர்கள் என்னைவிட மனமில்லாதவர்களாயிருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை அறிந்து மறுமுறை வருவ தாகவும் இப்போ திருச்செந்தூருக்குப் போகிறதாகவும் அவர்களுக்கும் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர் களுடைய ஆசிர்வாதத்தையும் நான் பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு நீக்கித் திருச்செந்தூருக்குப் போய் அங்கேயுள்ள திரிசுதந்தரப்பிராமணர்களாகிய சுப்பையா வீட்டில் விடுதி எடுத்து அவரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போய் அவரைக் கொண்டு சங்கற்பஞ் செய்வித்து கந்தபுட்கரணி, வதனாரம்பம் முதலாகிய இருபத்திநாலு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து கோயிலுக்குள்ளே போய் சுப்பிரமணியரையும் சண் முகரையும் தரிசித்து சங்கற்ப பூர்வமாய் ஸ்கந்தசஷ்டி விரதத்தை ஆரம்பித்து நானும் எனது சம்சாரமும் ஆறுநாளாய் உபவாசமிருந்தோம் ஆறு நாளுஞ் சென்ற பிற்பாடு அங்கே ஓர் மடங்கட்டுவிக்க வேணுமென்று நினைத்து பஞ்சிக் காட்டிலிருக்கும் தேவர் சந்ததியரில் ஒருவர் மாறலாய் கிரையத்திற்கு நிலம் வாங்கிச் சாதனம் நிறைவேறிய பின் அந்த இடத்தில் ஒரு மடம் ஸ்தாபித்து அம்மடத்திற்கு திரிசுதந்திரப் பிராமணரில் ஒருவராகிய சுப்பையரை தம்பதி சமேதராய் அந்த மடத்திலிருந்து மடத்தைத் தருமசாதனஞ் செய்து கோயிலுக்கு அருச் சனைக் கட்டளை வைத்து சண்முகரையும் சுப்பிரமணி யரையுஞ் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி திருப் பெருங்குன்றம் வந்து சண்முகப் பெருமான் திருமணக் கோலத்தைக் கண்டு தரிசித்து பேரானந்தத்தை அடைந்து அவ்விடம் விட்டு நீங்கி மதுரைக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியையும் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீரங்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து அரங்கப் பெருமானைத் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி திருவானைக்காவை அடைந்து ஜம்புகேசுரரையும் அகிலாண்டேசுவரியையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி வைத்தீசுவரர் கோயிலுக்குப் போய் வைத்தீசுரரையும் வாலாம்பியையும் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீர்காழிக்குப் போய் பிரமபுரீசுரரையும் தோணியப்பரையும் சட்டநாதரையும் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலூட்டிய பிரதிமையையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சிதம்பரம் போய் நடராசர் சந்நிதானத்தை அடைந்து நடராசரையும் மாணிக்கவாசகருடைய மோக்ஷமாகிய இரகசியத்தையும் கண்டு தரிசித்து கனகசபாபதியையும் படிகலிங்கத்தையும் தரிசித்து மறுபடி ஆகாசலிங்கத்தையும் உமையம்மையாரையும் சிவகாமியையும் தரிசித்து தில்லைக்காளியையும் இளமையினார் கோயிலுக்குப் போய், அங்கேயுள்ள சுவாமிகளையும் தரிசித்து தீக்ஷிதரால் அன்னம் அளிக்க அன்னத்தைப் புசித்து அவ்விடத்தில் பத்துநாளிருந்து அவ்விடத்தை விட்டு நீங்கி இராமநாதபுரம் வந்து சேதுபதி மகாராசாவை அடைந்து மகாராசாவால் மரியாதை செய்யப்பெற்றும் அவர் கொடுத்த பட்டுப் பீதாம்பரம் ரூபாய் இவைகளையும் பெற்றுக் கொண்டு அவருக்கு ஆசீர்வதித்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டு இராமநாதபுரத்தை விட்டு நீங்கி மறுபடியும் உத்தரகோசமங்கைக்குப் போய் அங்கே நாலுநாலிருந்து அங்கேயுள்ள குருக்கள்மார்களோடு விருந்து சாப்பிட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்தி மங்களேசுவரரையும் மங்களாம்பிகையையும் தெரிசித்து அவ்விடத்தைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கும்போது, அங்கே உள்ளவர்கள் சந்தோஷமாக எங்களுக்கு ஆசீர்வாதம் செய்து அனுப்பினார்கள்.

பாம்பன் வந்து கப்பலேறி ஊர்காவற்றுறை வந்து கப்பலைவிட்டிறங்கி களபூமியிலே இருக்கிற எனது தகப்பனார் வீட்டுக்குப்போய் அவர்களால் நாங்களெல் லோரும் ஆசிர்வதிக்கப்பெற்று இந்தியாவுக்குப் போய் வந்த சரித்திரம் எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்லி யும் தகப்பனார் விட்டிலேயே கொஞ்ச நாளிருந்து மறுபடி மணல்காட்டிலே உள்ள எனது வீட்டில் வந்து இருந்தேன். இப்படி ஆறு வருஷம் திருச்செந்தூருக்குப் போய் கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டித்து ஆறாவது வருஷத்தில் சண்முகப்பெருமான் சந்நிதானத்தில் விரதம் உத்தியாபனம் செய்து முடித்து வீடு வந்து சேர்ந்தேன். சொற்பகாலம் சென்றபின் இந்தியாவுக்குப் போய் அநேக ஸ்தலங்களைக் கண்டு தெரிசித்து திருப்பெருந்துறைக்குப் போய் அங்கே மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்த இடத்தைப் பார்த்து அங்குள்ள திருப்பணி விஷேசத்தை யும் மடந்தைநாதரையும் யோகாம்பிகையையும் தரிசித்து அவ்விடத்திற் சில நாள் தங்கி அங்கேயுள்ள விநோதங்களைப் பார்த்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாய் வேதாரணியம் வந்து சுவாமி தெரிசனம்செய்து பிரயாணமாய்க் கோடிக்கரைக்கு வந்து முத்து மீனாட்சி என்னும் படகில் பிரயாணமாய் ஊர்காவற்றுறையை அடைந்து மணற்காடு என்னும் பதியில் அக்கிரகாரத்தை அடைந்து முதியோர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்கரித்து, இளையோர்களை ஆசீர்வதித்து இருந்தேன்.

சிறிது காலத்திற்குப் பின் எங்கள் முதியோரால் ஸ்தாபிக்கப்பட்ட முத்துமாரி அம்மை ஆலயம் பழுதாயிருப்பதை அறிந்து அதைப் புதுப்பிக்க நினைந்து இலங்கையிலே அநேக இடங்களுக்குச சென்று காசு வாங்கிவந்து திருப்பணி வேலை செய்து, மூலமூர்த்தி, உற்சவமூர்த்திகளை ஸ்தாபனம் செய்து, துவஜாரோகணத் திருவிழா வேள்வி முதலிய சிறப்புகளும் வெகுசிரத்தையுடனும் மன அன்பாயும் நடாத்தி வருகிறேன்.

(இச் சரித்திரம், சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக் குருக்கள் வம்ச வரலாற்று ஏட்டிலுள்ளவாறே அச்சிடப்பட்டுள்ளது.)

**சரவணபவக் குருக்கள் வரலாறு.**

முத்தையருடைய பிள்ளைகள் இராமசாமி ஐயர், குமாரசாமி ஐயர், சீனிஐயர், என்னும் மூவர் இராமசாமி ஐயருடைய மகன் சுந்தரேசுவர ஐயர், இவருடைய மகன் - சரவணபவக்குருக்கள் இவருடைய வரலாறு :-

சிவஸ்ரீ சு. சரவணபவக்குருக்கள் அவர்கள் 1864 ஆம் ஆண்டு ஆனிமாதத்தில் ஜனனமானார்கள். இவர் காரைநகரிலிருந்த கார்த்திகேயப் புலவரிடத்திலும், வடலியடைப்பு என்னும் ஊரிலிருந்த வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாத்தியாரிடத்திலும் கல்விகற்றார். வியாவில் ஐய னார் கோவிலும் மணற்காடு மாரியம்மன் கோவிலிலும் பூசகராகவும் ஸ்தானீகராகவும் இருந்தார். பின் ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் சிவன் கோவிலில் பூசகராக நியமிக்கப் பெற்றார். கடமையாற்றிய இவர் சிலவருஷங் களின் பின் இந்தியாவுக்குச் சென்று வைத்தீஸ்வரன் கோவிலிலுள்ள சிவசுப்பிரமணியக் குருக்களால் ஆசாரி யாபிஷேகம் செய்யப் பெற்றார்கள். ஆசாரியா பிஷேகம் செய்யப் பெற்றபின் சிவன்கோவிலில் துவஜாரோகணம் முதலிய நைமித்திகக்கிரியைகள் இவர்களாலேயே செய்யப்பெற்றன. சரித்திரப் பெருமை வாய்ந்த (ஈழத்துச் சிதம்பரம்) ஐயனார் கோவிலில் புனராவர்த்தன கும்பாபிஷேகமும் இவர்களாலேயே செய்யப்பெற்றது. இவர்கள் புராணபடனம் முதலியவற்றிலும் சிறந்து விளங்கினார்கள்.

**கணபதீஸ்வரக் குருக்கள் காலம்**

இவர்களுக்கு, சோமசுந்தரஐயர், வள்ளியம்மா, தெய்வ நாயகி அம்மா, இலட்சுமி அம்மா, கணபதீசுவரக் குருக்கள், முத்துக்குமாரசாமி ஐயர், என்னும் ஆறு பிள்ளைகள் பிறந்தார்கள். இவர், சென்ற பிரதிமாதி ௵ கார்த்திகை மீ" சிவலோகப் பிராப்தியாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்திரு

# சி.சிவசரவணபவன்

அவர்களின்

# சிவசரவணபவ காதை

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. அக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களில் சிவப்பணி செய்யத் தமிழ் நாட்டிலிருந்து அந்தணர்களை வருவித்து வாழவைப்பது எமது மன்னர்களின் வழமையாக விருந்தது. இவ்வழமையின் படி தமிழ் நாட்டின் காஞ்சி புரத்திலிருந்து, யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் ஒருவரி னால் அழைத்து வரப்பட்டவர் பாரத்வாஜ கோத்தி ரத்தைச் சேர்ந்த குஞ்சிதபாத பட்டர். அவர் அளவெட்டி யிலுள்ள பெருமாக்கடவை எனும் பதியிற் குடியேறிச் சிவப்பணியில் ஈடுபட்டார். காலக்கிரமத்தில் அவரின் வழித்தோன்றல்கள் அருகிலுள்ள கந்தரோடையைத் தமது வாழ்விடமாகக் கொண்டனர். குஞ்சிதபாத பட்டரின் பரம்பரையில் வந்தவரே சிவசுப்பிரமணியக் குருக்கள்.

இது போலவே காரைநகரிலுள்ள வியாவில் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட வியாவில் ஐயனார் கோவிற் பணிகளுக்காக, குளக்கோட்டு மகாராசாவினால் தமிழ் நாட்டின் திருவுத்தர கோச மங்கையிலிருந்து அழைத்து வரப்பட்டவர், மங்களேஸ்வரக் குருக்கள். அவரின் வழித்தோன்றல்களுள் ஒருவரே "ஈழத்துச் சிதம்பரம்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் காரைநகர்ச் சிவன் கோவிலின் புகழ் பூத்த சிவாச்சாரியாராக விளங்கிய கணபதீஸ்வரக் குருக்கள். கணபதீஸ்வரக்குருக்களின் சிரேஷ்ட புத்திரி சௌந்தராம்பாள்.

சிவசுப்பிரமணியக் குருக்கள் தமிழிலும் வடமொழியிலும் மிகவும் புலமை பெற்றவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்றுப் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக விளங்கியவர். இவர் 26 ஆண்டுகள் ஆசிரியராகவும், 14 ஆண்டுகள் தலைமை ஆசிரியராகவும், 40 ஆண்டுகள் கல்விப் பணி புரிந்தவர். சீரிய முறையில் கல்விப் பணி செய்து முடித்த பின், ஆச்சார்யபிஷேகம் செய்விக்கப் பட்டு இறைபணியைத் தொடர்ந்தவர் இவர். கும்பாபிஷேகங்கள், ஆலய வருடாந்த உற்சவங்கள், உபநயனம், விவாகம் போன்றவற்றை ஆகம விதிப்படி செவ்வனே நடாத்தியவர்.

கணபதீஸ்வரக் குருக்களின் தலைமகள் சௌந்தராம்பாளுக்குச் சகோதரர்கள் மூவர், சகோதரி ஒருவர். இவரின் ஒரு சகோதரரான மங்களேஸ்வரக்குருக்கள் ஈழத்து சிதம்பரத்திலே பல ஆண்டுகளாகத் தனது தந்தையின் சிவப்பணியைத் தொடர்ந்த சிவாச்சாரியாராக விளங்கினார். இன்னொரு சகோதரரான வைத்தீஸ்வரக் குருக்கள் நாடு போற்றும் தமிழறிஞர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் மெய்யியல் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். அவர் ஒரு நடமாடும் சைவ, தமிழ்க் கலைக் களஞ்சியமாக விளங்கியவர். இவரது இளைய சகோதரியின் மகன் வி. ஈசுவரக் குருக்கள் தன் முன்னோர்களின் வழியில் ஈழத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்தின் தற்போதைய பிரதம சிவாச்சாரியாராகப் பணிபுரிந்து வருகிறார்.

குஞ்சித பாத பட்டரின் வழிவந்த சிவசுப்பிரமணியக் குருக்களும், மங்களேஸ்வரக் குருக்கள் வழி வந்த சௌந்தராம்பாளும் இல்லற பந்தத்தில் இணைந்து கொண்டனர். இவர்களின் மணவினைப் பேறாகப் பத்துப் பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இத் தம்பதியரின் ஆறாவது மகவாக 28/02/1933 இல் இப் பூவுலகிற் பிரவேசித்தவரே பிந்நாளில் "சிற்பி" எனப் பலராலும் அறியப்பட்ட சி. சிவசரவணபவன் எனும் இயற் பெயரைக் கொண்ட "சிற்பி ஐயா".

**கல்வி**

தனது ஆரம்பக் கல்வியைக் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் பெற்றுக் கொண்டார் "சிற்பி" அக் காலத்தில் மூன்று ஆண்டுகள் தமிழ் மொழி மூலம் இப் பாடசாலையில் கல்வி கற்ற பின்னர், ஆங்கில மொழி மூலம் கல்வியைத் தொடர ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் செல்வது வழக்கம். எனினும் இவர் தனது தந்தையாரின் விருப்பத்திற்கிணங்க எட்டாம் வகுப்பு வரை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலேயே தமிழ் மொழி மூலம் கல்வியைத் தொடர்ந்தார். இதன் பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்று, சிரேஷ்ட தராதரப் பத்திரத் தேர்வில் (S.S.C) சித்தி யடைந்தார்.

எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தியடைந்ததும் கொழும் பிலுள்ள உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Supreme Court Registry) எழுது வினைஞராகக் கடமை யாற்றினார். (191-1952)பணி புரிந்து கொண்டே இலண்டன் பல்கலைக்கழக இன்டர் ஆர்ட்ஸ் (Inter Arts) பரீட்சையில் சித்தியடைந்தார். அதனைத் தொடர்ந்து எழுது வினைஞர் வேலையை விட்டு ஆசிரியப் பணியில் இணைந்து கொண்டார். ஒரு பட்டதாரியாக இருந் தாற்றான் நல்ல ஆசிரியராக இருக்க முடியும் என்பதை உணர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் **1953** ஆம் ஆண்டு பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் நோக்கில் இணைந்து கொண்டார். பட்டதாரி மாண வனாக இருந்தபோது மிகச்சிறந்த மாணவனாக மிளிர்ந்து, தமிழ்ப்பாடத்திற்கான இராஜா சேதுபதி தங்கப்பதக்கத்தையும், ஆங்கிலப் பாடத்திற்காக ஸ்கின்னர் தங்கப்பதக்கத்தையும் சரித்திர பாடத்திற்காக மற்றொரு தங்கப்பதக்கத்தையும் பெற்று ஈழத்துக்குப் பெருமை சேர்த்தவர். சென்னைப் பல்கலைக்கழகக் கலை இளமாணி (B.A) பட்டத்தைப் பெற்று வெளியேறி **1955** ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியரானார்.

இதன் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் , பட்டப்படிப்பின் பின்னரான கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய் தார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியற் கலை முதுமாணிப் பட்டத்தி னையும் (M.A in Education) பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விப் பணி**

முழுமையாக நான்கு தசாப்தங்கள் (1953-1993) கல்விப் பணி புரிந்தவர் "சிற்பி" ஐயா, அவர்கள் முதல் இருபத்தெட்டு வருடங்கள் (1953-1981) ஆசிரியராகவும், பின்னர் பன்னிரெண்டு வருடங்கள் (1981-1993) அதிபரா கவும் அவர் அரும்பணியாற்றினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, செங்குந்தா இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பண்டாரவளை புனித சூசையப்பர் கல்லூரி, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியராகவும், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், யாழ் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி என்பவற்றில் அதிபராகவும் இவரது கல்விப் பணி அமைந்திருந்தது.

தனது மாணாக்கர்களை "நாணிலம் பயனுற வாழ வல்லமை" செய்வதில் விற்பன்னராகவே இவர் எப்பொழுதும் இருந்தார். செங்குந்தா இந்துக் கல்லூரி யில் பணியாற்றியபோது மேடைப் பேச்சுக்கள், கட்டுரைகள், நாடகங்கள், பிற இலக்கிய முயற்சிகள் என்பவற்றில் மாணவர்கள் திறமை பெறுவதற்காகப் பல்வேறு களங்களை உருவாக்கிக் கொடுத்த பெருமை இவரையே சாரும். யாழ்ப்பாணத்தின் பல பிரபல கல்லூரிகள் தமது வருடாந்த சஞ்சிகைகளை வெளியிடச் சிரமப்பட்ட கால கட்டத்தில், செங்குந்தா இந்துக் கல்லூரியிலிருந்து "சுடரொளி" என்னும் பாடசாலைச் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கி ஏழு ஆண்டுகள் தொடர்ச்சியாக அச் சஞ்சிகை வெளிவரக் காரணமாக வும் அமைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தென்மராட்சியிலுள்ள உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற் பணி புரிந்த போது தனது குடும்பத்தாருடன் அக்கிராமத்திலேயே வாழ்ந்து அங்குள்ள மக்களில் ஒருவராகவே மாறிப் பணி செய்தார். கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் என எல்லாச் செயற்பாடு களிலும் பாடசாலை உச்ச நிலையை அடையப் பாடு பட்டார். இக் காலத்தில், "இளந்தளிர்" என்ற இதழை வெளியிட்டார். தென்மராட்சியைச் சேர்ந்த பாடசாலை ஒன்றிலிருந்து முதன் முதலில் அச்சில் வெளியான மாணவர் சஞ்சிகை "இளந் தளிர்" தான்.

வைத்தீஸ்வராக் கல்லூரி பவள விழாக் கண்டபோது அதன் அதிபராகவிருந்தவர் இவர். பவள விழா நிகழ்வு கள் மூன்று நாட்கள் நடைபெற்றன. அந்நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தினையும், நேர்த்தியையும் விதந்துரைக்காதோர் இலர். வைத்தீஸ்வராக் கல்லூரி யின் புகழ் பூத்த அதிபர் அமரர் அம்பிகைபாகனுக்குப் பிறகு "சிற்பி ஐயா" வின் காலமே கல்லூரியின் பொற்காலம் என்கிறார் சிற்பியின் பின்னவரான வைத்தீஸ்வராக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் அவர்கள். எப்பொழுதும் போலவே வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் மாணவர்களின் முழுமை யான ஆளுமை விருத்திக்கான பயில் களங்கள் பலவற்றை உருவாக்கிக் கொடுத்தார் "சிற்பி ஐயா".

இவருடைய கற்பித்தற் திறனை வியக்காத, நயக்காத மாணவர்கள் இலர் என்றே கூறலாம். தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று பாடங்களையும் எளிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும், இலகுவாகவும், மாணவர் மனதில் பதியும் படி கற்பிப்பது இவரது தனிச் சிறப்பு எனக் கொண்டாடு கின்றார்கள் இவரிடம் கல்வி கல்வி கற்ற மாணவர்கள். எவ்விதமான பாடக் குறிப்புகளும் இன்றி, மடை திறந்த வெள்ளம் போல ஆற்றொழுக்காகப் பேசி, மிக முக்கிய மான எண்ணக்கருக்களை மட்டும் கரும் பலகையில் எழுதி, மிகத் தேவையான குறிப்புக்களை மட்டும் எழுதச் சொல்லும் இவரின் கற்பித்தற் பாங்கினை இன்றளவும் நினைவில் இருத்தியுள்ளனர் அவர் தம் மாணாக்கர்கள்.

மாணவர்களில் உள்ளுறையும் ஆற்றல்களை அடை யாளம் கண்டு, தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்துவது இவரது பிறவியியல்பு. "கல்லூரியின் மாணவத் தலை வனாகவும், சைவ சமய மன்றத்தின் தலைவனாகவும் என்னை உருவாக்கியதுடன், 1966ஆம் ஆண்டு கல்லூரியின் ஆண்டு மலரான "சுடர் ஒளியை" நீர் தான் பொறுப்பாக நின்று உருவாக்க வேண்டும் என்று பணித்தமையும், பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் "இலங்கை வரலாற்றைத்" "தெளிவுறக் கற்றுத் தந்தமை யும், 1970 களின் முற்பகுதியில் " தமிழ் மாணவர் பேரவையை" உருவாக்கித் தேசிய விடுதலைப் போராட் டத்தின் முன்னோடிகளில் ஒருவனாக நான் அமையக் காரணங்களாயின" என்கிறார் செங்குந்தா இந்துக் கல்லூரியில் இவரிடம் கற்றுப் பின் "தமிழ் மாணவர் பேரவை"யை உருவாக்கிய பே. சத்தியசீலன் அவர்கள்.

**இலக்கிய உலகில்**

தமிழிலும், வட மொழியிலும் பாண்டித்தியம் பெற்றி ருந்த இவரது தந்தையாரின் நூலகத்திலிருந்த பழந்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் புத்தகங்கள், அவர் கிரமமாக வாங்கிவரும் "ஈழகேசரி" , "இந்து சாதனம்", "கலைமகள்" என்பவை இளம் சிவசரவணபவனின் வாசிப்பார்வத்திற்கும், இலக்கிய ஈடுபாட்டிற்கும் முதற் காரணங்களாக அமைந் திருந்தன.

பின்நாளில் "மெய்யியற் கலாநிதி" எனப் பட்ட மளித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கௌர விக்கப்பட்ட, நடமாடும் சைவத் தமிழ்க் கலைக் களஞ் சியமெனப் போற்றப்பட்ட இவரது தாய் மாமன் வைத்தீஸ்வரக்குருக்கள், கந்தரோடையிலுள்ள இவரது வீட்டிலிருந்தே கல்வி கற்றார். வித்துவ சிரோன்மணி கணேசையரிடம் கல்வி கற்ற அவர், அக்காலத்தில் எழுதிய கட்டுரைகள், வாசித்த தமிழ்ப் புத்தகங்கள் என்பனவும் இளைய சிவசரவணபவனின் இலக்கியப் பசிக்குத் தீனியாயின.

மகாகவி பாரதியாரின் கவிதைகளை இவருக்கு அறிமுகப்படுத்தியதோடு, பாடசாலையில் இரண்டு வாரங்களுக்கொருமுறை கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த "மாணவர் போதினி" என்ற சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்களை இடம்பெறச் செய்த, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியர் திரு. சி. பொன்னம் பலம் (ஆதவன்), ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இவர் எழுதிய கட்டுரைகளை ஏனைய மாணவர்களுக்கு, முன்னுதாரணமான கட்டுரைகள் எனச் சிலாகித்து வாசித்துக் காட்டிய வித்துவான் சி. ஆறுமுகம் என்போர் இவரை எழுதத் தூண்டிய பெருமக்கள் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் அளித்த உற்சாகத்தில், "ஈழகேசரி" பத்திரிகைக்கு இவரால் எழுதி அனுப்பப்பட்ட ஆசிரியப்பா பத்திரிகையின் பாலர் பகுதியில் பிரசுரமானதும், "பழம் பண்பைப் பகிர்வதிற் பயனில்லை" என்ற கட்டுரை, "சுதந்திரன்" இதழில் பிரசுரமானதும், "ஸ்கந்தா" என்ற கல்லூரிச் சஞ்சிகையில் இவர் எழுதிய "இளைஞர் கடன்" என்ற கட்டுரை இடம் பெற்றதும் இவரது எழுத்து முயற்சிகளுக்கு உற்சாகம் தருபவையாக அமைந்தன.

கொழும்பில் உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவல கத்தில் பணிபுரிந்த காலத்தில் "மலர்ந்த காதல்" (1952) என்ற இவரது முதற் சிறுகதை சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமானதும், "மாணிக்கம்" என்ற சிறுகதை இலங்கை வானொலியில் ஒலிபரப்புக்காக ஏற்றுக் கொள்ளப் பட்டதும், அதே கதை "ஏழையின் இதயம்" என்ற தலைப்பில் வீரகேசரியில் பிரசுரமானதும், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் சேலையூர் விடுதியில் தங்கியி ருந்து கல்வி கற்ற போது சேலையூர் தமிழ் மன்ற வருடாந்த சஞ்சிகையான "இளந் தமிழன்" சஞ்சிகைக்கு இவர் இதழாசிரியரானதும் இவர் ஆக்க இலக்கியத் துறையிலும், இதழியல் துறையிலும் தடம் பதிக்கக் காரணங்களாயின.

அவரது இலக்கியப் பயணத்தின் போது எழுபது சிறுகதைகளையும், மூன்று நாவல்களையும் ("உனக்காகக் கண்ணே", "அன்பின் குரல்", "சிந்தனைக் கண்ணீர்") ஏராளமான கட்டுரைகளையும், பல கவிதைகளையும் படைத்துள்ளார். இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் "நிலவும் நினைவும்" (1964), "சத்திய தரிசனம்", (2001), "நினைவுகள் மடிவதில்லை" (2008) ஆகிய தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடப்பட்டன. "உனக்காக் கண்ணே" என்ற நாவலும் நூலுருப் பெற்றுள்ளது.

**இலக்கியநோக்கு**

எழுத்துத் துறையில் நீண்ட பயணத்தை மேற்கொண்ட மூதறிஞர் சிற்பி அவர்களின் இலக்கியப் பணியைப் புரிந்து கொள்வதற்கு இலக்கியம் குறித்த அவரது நோக்கு நிலையை அவருடைய வார்த்தைகளிலேயே அறிவது மிகப் பொருத்தமானதாகவிருக்கும்.

"மனிதன் மனிதனாக வாழ்ந்து, மகாத்மாவாக உயர்ந்து, அமரனாக நிறைவு பெறுவதற்குத் தூண்டும் உயர்ந்த சிந்தனையின் சொல்லுருவாக்கமே"இலக்கியம்"

"இன்ன நோய்க்கு இன்ன மருந்து எனச் சொல்வது போல", இதோ இந்த இலக்கியத்தால், சமூகத்திலுள்ள இந்தத் தீமையை ஒழித்து விடுவேன் எனக் கூற முடியாது. ஒருவனுடைய வாழ்க்கையின் போக்கை அவனுள்ளத்தே எழும் உணர்ச்சிகளும், எண்ணங்களுமே பெருமளவில் தீர்மானிக்கின்றன.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம், மாந்தர் தம்
உளள்ளத் தனைய உயர்வு"

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். இலக்கியத்தின் மூலம் நல்ல எண்ணங்களையும், தூய உணர்ச்சிகளையும் வாசகருள்ளத்தே கிளர்ந்தெழச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சுதந்திரம், சுபீட்சம், சமத்துவம் ஆகியவை ஈட்டப்பட்டவுடன் அதுவும் வன்முறைப் புரட்சியினால் ஈட்டப்பட்டவுடன், மனித மனம் நிறைவு பெற்று விடும் என்று சொல்ல முடியாது. “செல்வம் என்பது சிந்தனையின் நிறைவே” என்பதை நினைவிலிருத்தி, மனிதனுடைய அகத்தைச் செம்மைப்படுத்துவதன் வாயிலாக, அவனுடைய புறத்தையும் மேம்படச் செய்வதே இலக்கியமாகும்”

மேற்போந்த அவருடைய கூற்றுக்கள் அவருடைய இலக்கிய நோக்கு நிலையை அச்சொட்டாகப் பிரதிபலிப்பனவாகும்.

இலக்கியத்தினூடாக படைப்பாளி அடைய விரும்பும் மாற்றத்தைப் படைப்புகள் எவ்வாறு ஏற்படுத்துகின்றன? என்பது குறித்த அவரது பார்வையையும் அவருடைய வார்த்தைகளில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

“கலை மனிதனுக்காக, இலக்கியம் மனிதனுக்காகவென்றால், அந்தக் கலையும் இலக்கியமும் மனிதனின் வாழ்வைச் செம்மைப்படுத்தி, அவனை உயர்வடையச் செய்தல் வேண்டும்.”

இருக்கும் வாழ்வைச் சுட்டிக் காட்டி, இருக்க வேண்டிய வாழ்வைத் தொட்டுக் காட்டுவதே இலக்கியத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். படிக்க ஆரம்பித்ததும் வாசகர்களின் ஆவலைச் சுடர் விடச் செய்யும் தூண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாய், படித்து முடிக்கும் வரை அவர்களின் கவனம் அங்கிங்கு செல்லாமல், படைப்பாளி விரும்பும் போக்கி லேயே செல்ல வைக்கும் கடிவாளமாய், படித்து முடித்ததும் வாசகர்களின் சிந்தனையைக் கடைந்து வெண்ணெய் எடுக்கும் மத்தாய் இருப்பவை நல்ல படைப்புக்கள்"

"........... படித்து முடிக்கும் வரை, படைப்பாளியின் கைப் பொம்மையாகவே வாசகன் இருக்கிறான். படித்து முடித்த பின், மயக்கம் மெல்ல மெல்ல நீங்க வாசகன் இவ்வுலகிற்கு வருகிறான். அவனுடைய சிந்தனை வேலை செய்கிறது. மனதிலே போராட்டம் - வாதப்பிரதிவாதம் ஏற்படுகிறது. எழுத்தாளனின் கருத்துச் செம்மை அவனைக் கவ்விப் பிடிக்கிறது. அவனுள் மாற்றங்கள் ஏற்படக் கால்கோள் இடப்படுகிறது." இலக்கியங் களின் நோக்கம், அந் நோக்கத்தைப் படைப்புகளினூ டாக அடையும் செயன்முறை குறித்த சிற்பியின் நோக்கு நிலைகளின் பின் புலத்திலேயே அவருடைய இலக்கியப் பணி நோக்கப்பட வேண்டும்.

**இதழியல் - கலைச்செல்விக் காலம்**

ஒரு படைப்பாளியாக இவரின் இலக்கியப் பணி களுக்கு அப்பால், ஒரு இதழாசிரியராக, மற்றைய படைப்பாளிகளின் படைப்புத் திறனை வெளிக் கொணரக் களமமைத்துக் கொடுத்த இவரது பணி அனை வராலும் சிலாகிக்கப்பட்டு வருகிறது.

எட்டு ஆண்டு காலம், **1958** இலிருந்து **1966** வரை, கலைச்செல்வியை (**71** இதழ்கள்) வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்செல்வியின் ஒரே ஒரு நோக்கம் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனக் கருதிய "சிற்பி" அவர்கள், காத்திரமான இலக்கியக் கருத்துப் பரிமாற்றத்திற்கு கலைச் செல்வி வழி சமைத்துக் கொடுத்தது என்பதில் பெருமையுற்றிருந்தார். புதிய எழுத்தாளர் தலைமுறை யொன்றைக் கலைச் செல்வி உருவாக்கியது என்று போற்றப்படும்போது "உருவாக்கியது" என்பது பெரிய சொல், வளரும் எழுத்தாளர்களின் திறமையை இனங் கண்டு ஆதரித்தமையும், வளர்ச்சிக்கு வாய்ப்பளித் தமையுமே கலைச் செல்வியின் பங்களிப்பாக இருந்தன" எனத் தன்னடக்கத்தோடு கூறுவார்.

ஈழத்து தமிழ் இலக்கிய, இதழியல் துறைகளில் பிரகாசித்த செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், யாழ். நங்கை, கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம், பெனடிக்ற் பாலன், ஐ. சாந்தன், கல்வயல் வே. குமாரசாமி, மயிலன், பொ.சண்முகநாதன், மு. பொன்னம்பலம், தி. ஞானசேகரன், மு. கனகராஜன், பா. சத்தியசீலன், தெணியான், மட்டுவிலான், கவிதா, பாமா ராஜகோபால், மு.வ. கானமயில்நாதன், து. வைத்தி லிங்கம், வி.க. இரத்தினசபாபதி, இளையவன், செ. கதிர்காமநாதன், முனியப்பதாசன், க. பரராஜசிங்கம் (துருவன்) கலா. பரமேஸ்வரன், மணியம், முகிலன், பெரி. சண்முகநாதன் ஆகியோர் வளரும் எழுத்தாளர் களாகக் கலைச் செல்வியில் வாய்ப்பளிக்கப்பட்டுத் தமது திறமைகளை வெளிப்படுத்தியவர்கள்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றிப் பேசுபவர்கள் கலைச் செல்விக் காலத்தைப் புறமொதுக்கிப் பேச முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்படும் வகையில் கலைச் செல்வியின் இலக்கியப் பங்களிப்பு விளங்கியது. "கலைச் செல்விக் காலம்" குறித்த "சிற்பி" அவர்களின் பதிவு "ஞானம்" பத்திரிகையில் ஜூன் 2008இல் இருந்து தொடராக வெளிவந்தது.

**"ஓய்வு நிலை" வாழ்க்கை**

நாற்பதாண்டு கால ஆசிரியப் பணியிலிருந்து 1991ஆம் ஆண்டு "ஓய்வு" பெற்ற போதும், அவர் உடல் நலக் குறைவால் வருந்திய கடைசி ஆறு மாதங்கள் வரையும், அவர் ஓய்வொழிச்சலின்றித் தொழிற்பட்டார்.

இக் காலப்பகுதியில் அவர் ஒரு "பிதாமகர்" ஆக, "மூதறிஞர்" ஆக தனது வகிபாகத்தை ஆற்றினார். தனது ஆங்கில அறிவை வளர்ந்த, தொழில் புரியும், பல்கலைக் கழக மாணவர்களாயிருக்கும், அனைத்துத் திறத்தவருக் கும் இல்லையெனாது வழங்கினார். இலக்கிய உலகத் தைச் சேர்ந்தவர்கள், இளம் ஆய்வாளர்கள், சமய ஆர்வ லர்கள் என அனைவருக்கும் தேவையான ஆலோசனை களையும், வழிகாட்டுதல்களையும் அவர்கள் கோரும்போது வழங்கி வந்தார். விழாக்களிலும், நிகழ்வு களிலும் பங்கேற்றுத் தனது கணீரென்ற குரலினால் உரையாற்றி, ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்து, கருத் துருவாக்கத்தில் ஈடுபட்டார். அரசியற் தலைவர்களை நேரிலும், கடித மூலமும் தொடர்பு கொண்டு மிகுதிக் கண்மேற்சென்று இடித்து, சாதாரண மக்களின் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்து வந்தார். அவரது குடும்பத்தி னருக்கு ஒரு "பிதாமகர்" ஆகத் தேவையான ஆற்றுப் படுத்தல்களை மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடும்ப நிலை**

அவரது இல்லறத்துணையாகிய திருமதி. சி.சரஸ்வதி அவர்களோடு மிகவும் தோழமையுடன் பழகும் அவர், இலக்கியம், சமூகம், அரசியல், குடும்ப விவகாரங்கள் என அனைத்திலும் அவரோடு உரையாடலை மேற்கொள் வார்.

அவருடைய பிள்ளைகளோடும் மிக நட்பார்ந்த முறையில் பழகும் அவர், உலக விடயங்கள் தொடர்பான அவர்களது தேடலை ஆழப்படுத்தும் வகையில் கருத்துக்களைப் பகிர்ந்து வருவார்.

இவருடைய மூத்த மகன் சி. சுந்தரேஸ்வரன், ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். மெட்ரோ கிளையில் முகாமை யாளராகவுள்ளார். இவர் சு. சாந்தினியை மணமுடித்து மூன்று ஆண் மகவுகளைப் பெற்றுள்ளார். சு. சாந்தினி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆங்கிலமொழி மூல விஞ்ஞான ஆசிரியையாகக் கடமை புரிகிறார். இத் தம்பதியினரின் பிள்ளைகளாகிய சு. வித்தியாசாகர், சு. சாயிசங்கர் சு.வித்தியாபவன் ஆகியோர் யாழ் இந்துவில் கல்வி கற்று வருகின்றனர்.

இரண்டாவது மகன் சி. சாயீஸ்வரன் சத்திர சிகிச்சை நிபுணராக, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி வருகிறார். மருத்துவர் சா. ஸ்ரீலதாவை மணமுடித்த இவருக்கு மூன்று பிள்ளைகள் சா. யதுகேசன், சா. கேசாயினி, சா. தனுஷாயினி ஆகிய இவர்களின் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியைக் கொழும் பில் கற்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இளைய மகன் சி. சர்வேஸ்வரன், ஒரு பொறியியலாளர். தற்போது "எரிக்சன்" எனும் சுவீடனைத் தளமாகக் கொண்ட தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப நிறுவனத்தின் இலங்கைக் கிளையில் பிராந்திய நிகழ்ச்சித் திட்ட முகாமையாளராகக் கடமை யாற்றுகிறார். ச. சிந்துஜாவைக் கரம் பிடித்த இவருக்கு இரண்டு பிள்ளைகள் இத் தம்பதியினரின் செல்வங் களான ச. சுபஸ்ரீ, ச. தரங்கிணி ஆகியோர் தமது ஆரம்பக் கல்வியைக் கொழும்பில் கற்று வருகின்றனர்.

**நிறைவு நாட்கள்**

நிறைவு நாட்களில் சற்று உடல் நலமற்றிருந்த "சிற்பி" ஐயா, தனது அன்பு மனைவியினதும், புதல்வர்களினதும் கவனிப்பிலும், மருத்துவ நிபுணர்களின் அன்பான சிகிச்சையாலும் அமைதியுற்றிருந்தார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த" சிற்பி ஐயா எனும் சிவசரவணபவச் செம்மல் கடந்த திங்கட்கிழமை (09.11.2015), ஐப்பசித் திரயோதசித் திதியில் அமைதியாகத் தில்லைக் கூத்தனின் பாத கமலங்களைச் சென்றடைந்தார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பி - சுயவிபரம்

பெயர் : சி.சிவசரவணபவன்

புனை பெயர் : சிற்பி, யாழ்வாசி

தந்தை : சு. சிவசுப்பிரமணியக்குருக்கள்

தாய் : சி.சௌந்தராம்பாள்

பிறந்த திகதி : 28.02.1933

வாழ்விடம் : டாக்டர் சுப்பிரமணியம், வீதி
கந்தரோடை ,சுன்னாகம்.

மனைவி : சி. சரஸ்வதி

பிள்ளைகள் : சி. சுந்தரேஸ்வரன் B.Sc (Agri) M.B.A.(Manipal)
சி. சாயீஸ்வரன் M.B.B.S,MD (Surgery), MRCS
சி. சர்வேஸ்வரன் B.Sc (Eng) P.M.P.

கல்வி : பாடசாலைக் கல்வி
1. யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
2. யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்படிப்பு

1. கலை இளமாணி (B.A ).,
   சென்னை பல்கலைக்கழகம்

பட்டப்பின் படிப்பு :

1. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
   (Dip.in.Education)
   இலங்கை பல்கலைக்கழகம் ,
   பேராதனை வளாகம்
2. கல்வியியல் முதுமாணி
   (M.A-Education)
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அரச சேவை : எழுது வினைஞர் ( 1951 - 1953)
இலங்கை உயர் நீதிமன்றப்பதிவாளர் அலுவலகம்

ஆசிரியர் ( 1953 - 1981)

1. யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி
2. யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி
3. யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
4. பரி. சூசையப்பர் கல்லூரி, பண்டாரவளை
5. யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

அதிபர் ( 1981 - 1993)

1. யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
2. யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப் பணி : அ) இதழியல்- இதழாசிரியர்

1. இளந்தமிழன் (1955)
   சேலையூர் தமிழ் மன்றம்,
   சென்னை கிறிஸ்தவக் கல்லூரி.
2. கலைச் செல்வி (1958-1966)
   மாத இதழ்.
3. விளக்கு சஞ்சிகை, த.ஈ கல்வி
   மேம்பாட்டுக் கழகம்
4. இந்து சாதனம், சைவ பரிபாலன
   சபை யாழ்ப்பாணம்.

ஆ) பதிப்புக்கள் - பதிப்பாசிரியர்.

1. ஈழத்துச் சிறுகதைகள் (1956),
   தமிழருவி பதிப்பகம்
2. "எழிலி" (காவியம்),
   ச. வே. பஞ்சாட்சரம்.
3. கவிதைச் செல்வம், (பல்வேறு
   ஈழத்துக் கவிஞர்களின்
   கவிதைகளின் தொகுப்பு.)
4. நல்லூர் நான்மணிமாலை,
   சொக்கன்
5. "மறக்குடி மாண்பு"
   (இலக்கிய நாடகம்)
   புலவர் நா. சிவபாதசுந்தரனார்
6. கொழும்புப் பெண்
   (நகைச்சுவைக் கட்டுரைகள்)
   பொ. சண்முகநாதன்
7. "மனிதமாடு"
   (சிறுகதைத் தொகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.செ. முருகானந்தன்.
(யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையின் இலக்கியக் குழுவின் ஊடாக)

இ) பிரசுரப் படைப்புக்கள்.

1. நிலவும் நினைவும்(1964), சிறுகதைத் தொகுதி, பாரி நிலையம்.
2. உனக்காகக் கண்ணே (நாவல்), முத்துச்சுடர் பதிப்பகம்.
3. சத்திய தரிசனம்(2001), சிறுகதைத்தொகுதி யாழ் இலக்கிய வட்டம்.
4. நினைவுகள் மடிவதில்லை (2008) சிறுகதைத் தொகுதி மணிமேகலை பிரசுரம்.

ஈ) மொழி பெயர்ப்பு

1. தென்னிந்திய வரலாறு பேராசிரியர் K.A நீலகண்ட சாஸ்திரி. (திரு வ. பொன்னம்பலம் M.A (வி.பி) அவர்களுடன் இணைந்து மொழி பெயர்ப்பு)

பரிசுகள் : 1. சென்னை திருவல்லிக்கேணி 'ஔவை' தமிழ்ச் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு (1954) கட்டுரை: "தமிழில் முடியும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வத்தளை ‘ உதயம்’ சஞ்சிகை
நடாத்திய சிறுகதைப்
போட்டியில் முதலாம் பரிசு
(1955) சிறுகதை : ‘ மறுமணம்’

3. ‘ கல்கி’ வார இதழ் நடாத்திய
சிறுகதைப்போட்டியில்
ஆறுதல் பரிசு
(1961) சிறுகதை: ‘காதல் பலி’

4. சென்னை வாசகர் வட்டம்
நடாத்திய குறுநாவல்
விமர்சனப் போட்டியில்
முதலாம் பரிசு (1969)

பதக்கங்கள் : 1. தமிழ் மொழிக்கான இராஜா
சேதுபதி தங்கப்பதக்கம்.

2. ஆங்கில மொழிக்கான
ஸ்கின்னர் தங்கப்பதக்கம்

3. சரித்திரப் பாடநெறிக்கான
தங்கப்பதக்கம்.
(பட்டப் படிப்பின் போது
சென்னை கிறிஸ்தவக்
கல்லூரியில்
வழங்கப்பட்டவை.)

விருதுகள் : 1. ஆளுநர் விருது (2002),
வ-கி மாகாணக்கல்வி
பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை ,
இளைஞர் விவகார அமைச்சு.

2. கௌரவ விருது (2006) ,
கொழும்பு கம்பன் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஞான ஏந்தல் விருது(2006) , வலி. தெற்குபிரதேச செயலகக் கலாசாரப் பேரவை.
4. தமிழியல் விருது (2011), எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.
5. சிவத்தமிழ் விருது (2012) , சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச்சபை.

பாராட்டு விருதுகள் :
1. சேவை பாராட்டு விருது (2007) , செங்குந்தா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், அவுஸ்திரேலியா.
2. நீண்ட கால துணிவு , அர்ப்பணிப்புடனான சேவைக்கான விருது.(2010)' உதயன் நாளிதழ் 25 வது ஆண்டு விழாக்குழு.
3. தமிழ் தொண்டுக்கான விருது (2011) , உலகத் தமிழிலக்கிய சங்கம்.

கௌரவப் பட்டங்கள் :
1. ' கலைச்சுடர் (2008) கலை - கலாசார பேரவை , காரைநகர்.
2. ' கலைஞானப் பொழில் (2009) வலி- தெற்குப் பிரதேச சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ‘ கலைக்கதிர்’ (2011) , உசன் - கனடா ஒன்றியம்.

பொதுப்பணி : 1. துணைச்செயலாளர், யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கம். (1958- 1960)

2. துணைச் செயலாளர் , அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்( 1962 - 1963)

3. உறுப்பினர் , இலங்கை சாகித்திய மண்டல மொழி பெயர்ப்புப் பிரிவு. (1964 - 1965)

4. தலைவர் , யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை (1986 - 1987)

5. பொருளாளர் ,வட மாகாண அதிபர் சங்கம் ( 1992 - 1995)

அமரத்துவம் : 09.11.2015 , திங்கட்கிழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் அனைவரினதும் கலங்கரை விளக்காய் விளங்கிய எமது குடும்பத் தலைவர் உடல் நலமற்றிருந்த போது மருத்துவ சிகிச்சையளித்த மருத்துவர்களுக்கும், மருத்துவ உதவிச் சேவைகள் வழங்கியவர்களுக்கும்,

அக் காலப்பகுதியில் அவரை நேரில் வந்து பார்த்தும், தொலைபேசியினூடாகத் தொடர்பு கொண்டும், அவரை மகிழ்ச்சிப் படுத்தி, உறுதியூட்டிய அனைத்து அன்பர்களுக்கும்,

அவர் அமரத்துவமடைந்த பின்னர், அவரது வாழ் நாள் நிறைவு நிகழ்வினை, கிரியைகளை ஒழுங்கமைத்து நடத்த உதவிய எமது உறவினர்கள், நண்பர்கள், கந்த ரோடைக் கிராம மக்கள் அனைவருக்கும்,

அவருடைய நிறைவு நாள் நிகழ்விற்குப் பெருவாரி யாக வருகை தந்து நேரில் அஞ்சலி செலுத்திய செங்குந்தா இந்துக் கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி, வைத்தீஸ்வராக் கல்லூரி என்பவற்றில் கற்ற மாணவர்கள், கடமையாற்றிய ஆசிரியர்கள், அவரது இல்லத்தில் அவரி டம் ஆங்கிலம் கற்ற மாணவர்கள், அவரின் எழுத்துலகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகபாடிகள், இலக்கிய நண்பர்கள், வாசகர்கள், உசன் கிராம மக்கள், கந்தரோடை வாழ் மக்கள், காரைநகர் வாழ் மக்கள், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர், அதிபர், ஆசிரியர்கள், இந்துக் கல்லூரிச் சமூகத்தினர், ஹட்டன் நஷனல் வங்கிக் குடும்பத்தினர், தமிழ் சிவில் சமூக அமையத் தோழர்கள், வவுனியா சமூக - பொருளாதார சூழல் அபிவிருத்தியா ளர்கள் (SEED) நிறுவனத்தோழர்கள், யாழ். வர்த்தக சமூகத்தினர், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை யிலிருந்து வந்திருந்த ஊழியர்கள், Erricsson நிறுவன ஊழி யர்கள், அவர் தம் புதல்வர்களின் விவசாயபீட, மருத்து வப்பீட, பேராதனை பொறியியல் பீட சகபாடிகள், விரிவுரையாளர்கள், யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவருக்கும்,

பதாதைகள், மலர் வளையங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அச்சு, இலத்தி ரனியல் ஊடக நினைவுக் குறிப்புகள், அஞ்சலிக் கட்டுரை கள் என்பவற்றின் ஊடாக அஞ்சலி செலுத்தியவர்கள், தொலைபேசியினூடாகவும், சமூக வலைத்தளங்களூடா கவும் அனுதாபந் தெரிவித்தவர்கள், இரங்கல் நிகழ் வினை ஒழுங்குபடுத்தியவர்கள், வழிநடாத்தியவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கலுரை நிகழ்த்தியவர்கள், இன்னும் இன்னோரன்ன வழிகளில் எமக்கு உறுதுணையாக விருந்த உங்கள் அனைவருக்கும்,

இந்நூலை 48 மணிநேர அவகாசத்தில் சிறப்புறப் பதிப்பித்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும், எமது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்ச

*1. குஞ்சிதபாதபட்டர்*
*(காஞ்சீபுரத்திலிருந்து வந்தவர்)*
*2. கணபதி பட்டர்*
*3. குஞ்சிதபாத ஐயர்*
*4. கோபால ஐயர்*
*5. சின்னத்தம்பி ஐயர்*
*6. தாமோதர ஐயர்*
*7. முத்தையர்*
*8. கதிரேச ஐயர்*
*9. கனகசபாபதிக் குருக்கள்*
*10. சுவாமிநாதக் குருக்கள் + இலட்சுமி அம்மா*

**சிவசுப்பிரமணியக் குருக்கள் +**

*லலிதாம்பிகை + *ஜெகநாதஐயர்

*ஞானம்

*சாந்தநாயகி + *குஞ்சிதபாதகுரு

*இலட்சுமிஅம்மா + சோமாஸ்கந்தசர்மா

*கனகசபாபதிகுரு + *புவனேஸ்வரி

**சி. சுந்தரேஸ்வரன் + சு. சாந்தினி**

**சு. வித்தியாசாகர்**
**சு. சாயிசங்கர்**
**சு. வித்யாபவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்சம்

1. கல்யாணசுந்தரக் குருக்கள் (காஞ்சீபுரம்)
2. சிவசுப்பிரமணியக் குருக்கள்
3. கார்த்திகேயக் குருக்கள்
4. நடராசக் குருக்கள்
5. விஸ்வநாதக் குருக்கள்
6. காங்கேயக் குருக்கள்
7. ஆதி சிதம்பரேஸ்வரக் குருக்கள்
8. மாணிக்கவாசகக் குருக்கள்
9. பரமேஸ்வரக்குருக்கள்
10. பாலசுப்பிரமணியக் குருக்கள்
11. கனகசபாபதிக் குருக்கள்
12. வையாபுரிக் குருக்கள்
13. குருசாமிக் குருக்கள்
14. மாணிக்கவாசகக் குருக்கள்
15. மங்களேஸ்வரக் குருக்கள் (திருவுத்தரகோசமங்கையிலிருந்து ஈழம் வந்தவர்)
16. சூரிய நாராயணக் குருக்கள்
17. கனகசபாபதிக் குருக்கள்
18. தாமோதர ஐயர்
19. கண்டோ பண்டித ஐயர்
20. முத்தையர்
21. இராமசாமி ஐயர்
22. சுந்தரேஸ்வர ஐயர்
23. சரவணபவக் குருக்கள்
24. கணபதீஸ்வரக்குருக்கள் + சிவயோக சுந்தராம்பாள்

ர் + **சௌந்தராம்பாள்**

**சிவசரவணபவன்** + **சரஸ்வதி**

*மீனாட்சியம்மா + *சேதுமாதவர்

நாகேஸ்வரி + *சோமாஸ்கந்தஐயர்

பராசக்தி + *பரமேஸ்வரன்

சரஸ்வதி + *சுப்பிரமணியசர்மா

**சி.சாயீஸ்வரன்** + **சா.ஶ்ரீலதா**

**சா.யதுகேஷன்**
**சா.கேஷாயினி**
**சா.தனுஷாயினி**

**சி.சர்வேஸ்வரன்** + **ச.சிந்துஜா**

**ச.சுபஶ்ரீ**
**ச.தரங்கினி**


*** அமரர்களைக் குறிக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



GOD'S PRESENCE IS FELT IN SILENCE

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org